விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-7621)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 30 திங்கட்கிழமை (16.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 271

## தமிழ் மக்கள் பேரவையின் கோரிக்கையை ஏற்று தமிழர் தாயகம் எங்கும் இன்று பூரண கதவடைப்பு

◈ போக்குவரத்து ஸ்தம்பிதம் ◈ பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் பேரவையின் கோரிக்கையை ஏற்று தமிழர் தாயகமெங்கும் இன்று பூரண கதவடைப்பு இடம்பெறும். இதனால் போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பிதம் அடைவதுடன் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் என அனைத்தும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு ஆதரவளிக்கவுள்ளனர்.

பல்கலைக்கழகங்கள், வர்த்தக சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், ஆசிரியர் நலன் புரிச் சங்கங்கள், கமத் தொழில் அமைப்புக்கள், கடற்றொழிலாளர் அமைப்புக்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை, தென்னை வள கூட்டு 23

# இன்று எழுக தமிழ் எழுச்சிப் பேரணி



## வரலாறு காணாத அளவில் மக்கள் பேரலையாக அணி திரள்வர்

(யாழ்ப்பாணம்) தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று எழுக தமிழ் எழுச்சிப் பேரணி இடம்பெறும்.

இன்று காலை 9 மணிக்கு நல்லூர் மற்றும் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இருந்து முற்றவெளி நோக்கி பேரணி ஆரம்பமாகும். இந்த பேரணியில் வரலாறு காணாத வகையில் மக்கள் பேரலையாக அணிதிரண்டு தமது உரிமைக்கான கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளனர். (ஞா)

யாழிலிருந்து சென்ற

## புகையிரதம் தடம்புரண்டது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலிருந்து பெலியத்த நோக்கி பயணித்த 94 ஆம் இலக்க ரயில் மாஹோ ரயில் நிலையத்திற்கு 23

வல்வெட்டித்துறை

## மக்கள் வங்கி கட்டடத்தில் தீ

(கரணவாய்)
வல்வெட்டித்துறையில் உள்ள மக்கள் வங்கிக் கிளையின் எந்திரப் பகுதியில் 23

அமைச்சர் அர்ஜுன

## பலாலிக்கு நேற்று திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)
பிராந்திய மற்றும் சர்வதேச விமான நிலையமாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பலாலி விமான நிலையத்தின் 23

## எழுக தமிழராய் பேரெழுச்சி கொள்க

புரட்சித் தமிழன் சத்தியராஜ் அழைப்பு



(சென்னை)
தளராத உறுதியுடன் யாழ். முற்றவெளி நோக்கிய எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்று பேரெழுச்சி கொள்க என தமிழ்த் திரைப்பட நடிகர் புரட்சித் தமிழன் சத்தியராஜ் அழைப்பு விடுத்துள்ளார். 12

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்று ஆரம்பம்



16

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய

## பாராளுமன்ற தெரிவுக்குழு இன்று ஜனாதிபதியைச் சந்திக்கிறது

(கொழும்பு)
ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் பாராளுமன்ற தெரிவுக்குழு இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து தெரிவுக்குழு முன் ஆஜராகும் விவகாரங்கள் குறித்து இறுதி செய்ய உள்ளது.

குறித்த சந்திப்பின்போது ஜனாதிபதி வழங்கும் சாட்சியங்களை ஊடகங்களுக்கு தெரியப்படுத்துவது தொடர்பாகவும் 23

## வதந்திகளைப் பரப்ப சில தீய சக்திகள் முயற்சி

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் பேரவையால் ஒழுங்குபடுத்தப்பட்ட மாபெரும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியினை சில தீய சக்திகள் குழப்புவதற்கு முயற்சி செய்து வருவதாக அறிய முடிகிறது.

பல்வேறுபட்ட பொது அமைப்புக்களின் பேராதரவுடன் இன்று இடம்பெறும் 23

## ஜனாதிபதி வேட்பாளராக சிறுபான்மையினர் இல்லை

மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்கள் சார்பில் ஜனாதிபதி 23

### கடந்த 5 ஆண்டுகளில்

# பெரும்பான்மை பலம் இல்லாமலேயே பல விடயங்களை நிறைவேற்றி விட்டேன்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெருமிதம்

(கொழும்பு)

கடந்த ஐந்து ஆண்டுகளில், யாரும் செய்ய முடியாத பல விடயங்களை அரசாங்கம் செய்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை வரலாற்றில் சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பெரும்பான்மை பலம் இல்லாத ஆட்சியின் ஊடாக நாட்டை முன்னோக்கி கொண்டு சென்றுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கிடைத்தால் தாம் சேவை செய்து காட்டுவதாக சிலர் சவால் விடுக்கின்றனர்.

ஆனால் தற்போதைய ஆட்சிக்கு கடந்த 4 ஆண்டு காலமாக பெரும்பான்மை அதிகாரம் கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் நாட்டை



வீழ்ச்சிப்பாதைக்குள் தள்ளிவிடாமல் முன்னேற்றகரமான பாதைக்கு அழைத்து சென்றுள்ளதாக பிரதமர் கூறினார்.


தற்போது நாட்டில் "வெள்ளை வான்" கலாசாரம் இல்லை.

அவசர நிலைகளில் அழைத்தால் நோயாளர் காவுகை வண்டியின் சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

அவ்வாறானதொரு மாற்றத்தை தாம் நாட்டில் ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஞா)

### 5 ஆயிரம் சமுர்த்தி

## அபிவிருத்தி அதிகாரிகளுக்கு நேற்று நிரந்தர நியமனம்



(கொழும்பு)

5000 சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளுக்கான நிரந்தர நியமனங்களை வழங்கும் வைபவம் நேற்று பிரதமர் விக்கிரமசிங்க தலைமையில் இடைபெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அமைச்சர்களான தயா கமகே, வஜிர அபெயவர்தன, பி. ஹரிசன், அனோமா கமகே ஆகியோரும் கலந்துக்கொண்டனர். (ஞா)

## எழுகதமிழ் எழுச்சிப் பேரணிக்கு அனைத்து அமைப்புக்களும் பேராதரவு

(நேற்றைய தொடர்ச்சி....)

மருதனார்மட வர்த்தக சங்கம், தெல்லிப்பழை பனை தென்னை சமாசம், வலி கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசம், வளலாய் கடற் தொழிலாளர் சங்கம், வடமாகாண இலங்கைப் போக்குவரத்துச்சபையின் இணைந்த தொழிற் சங்கம், அமைச்சர் மனோவின் ஜனநாயக மக்கள் முன்னணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தொல்.திருமாவளவன், திராவிடர் விடுதலைக் கழகம் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான், இயக்குநர் கௌதம், நடிகர் கருணாஸ், நடிகர் சத்தியராஜ், நாடு கடந்த தமிழீழ அரசு, சென்னை பல்கலைக்கழக மாணவர் அமைப்பு, சமூக விஞ்ஞான ஆய்வு மையம், சுதேச மக்கள் கட்சி, மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகம், மக்கள் சக்தி, பாரவூர்திச் சங்கம், வவுனியா நகரசபைத் தலைவர், தமிழ்நாடு சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள், பூநகரி வர்த்தக சமூகம், நெல்லியடி முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கம் ஆகியன ஆதரவு தெரிவித்துள்ளன.


## மரண அறிவித்தல்

பிறப்பு
04
12
1940



இறப்பு
13
09
2019

### மரியாம்பிள்ளை பேரின்பநாதன்

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பேரின்பநாதன் கடந்த (13.09.2019) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தவமணியின் பாசமிகு கணவரும், பத்திநாதன், அல்வீனம்மா காலஞ்சென்ற சோதிநாதன் மற்றும் அம்லோற்பவம், அருட்பணி போல் நட்சத்திரம்(அ.ம.தி), எலிசபேத் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மரீனா (முகாமைத்துவ உதவியாளர் - குடிவரவு குடியகல்வு திணைக்களம் - கொழும்பு), மரியகாந்தி (ஆதார வைத்தியசாலை-தெல்லிப்பளை) மரியதயானி, நவஜீவன் (பிராந்திய முகாமையாளர் - டயலொக்), றொசான் (இ.போ.ச) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராசா (உப பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு), பீற்றர் யூலியன் (சந்திரன்), வொட்கின்சன் (தேசிய சமாதானப் பேரவை - கொழும்பு), சுலக்ஷனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் -சிறுவர் பராமரிப்பு மற்றும் சேவைகள் திணைக்களம் - நீதிமன்ற அலகு, யாழ்ப்பாணம்), நிரோசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் ஆன்கிறிஸ்ரலா, மக்ஷலோ, எரின் புளோறா, செரபியா, கென்றிக்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (16.09.2019) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், குருக்கள், துறவிகள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல் :
குடும்பத்தினர்
0773337749, 0772627903


### எழுகதமிழ் எழுச்சிப்பேரணிக்கு

## நெல்லியடி முச்சக்கரவண்டி ஓட்டுநர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு நெல்லியடி முச்சக்கரவண்டி ஓட்டுநர் சங்கம் தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளைச் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இன்றைய தினம் இடம்பெறும் எழுக தமிழ் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு எமது பூரண ஆதரவை வழங்குகிறோம்.

இப் பேரணி மூலம் தமிழ் மக்களுக்கு தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல உள்ளமையை ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் புரிந்து கொள்ளும் வகையில் குறித்த பேரணி பேரெழுச்சி பெற எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என நெல்லியடி முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஞா. 60, 10)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## கண்ணீர் அஞ்சலி



திருமதி
பாலாம்பிகை கருநேசன்
பிறப்பு:- 1965.02.28
இறப்பு:- 2019.09.14

எமது பாடசாலை ஆசிரியர் க.கருநேசன் அவர்களின் அன்பு மனைவி திருமதி பாலாம்பிகை கருநேசன் அவர்கள் 14/09/2019 அன்று காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்,
நீர்வேலி.


(305)

### எத்தனை இழப்புக்கள், எத்தனை துரோகங்கள் அத்தனைக்கும் விடைகாணாமல்

# வீறுகொண்டெழுந்த இனம் பின்வாங்காது

# எழுக தமிழர்களே! எழுக தமிழில் இணைக!

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி பேராதரவு



“முன்பொருமுறை இதே செப்டெம்பர் மாதத்தில் இந்திய அமைதிப் படைக்கு எதிராய் ஈழத் தமிழர்களை எழுச்சி கொள்ளச் செய்ய இந்தியாவின் ஆக்கிரமிப்புப் பசிக்கு தன்னுயிரை இரையாக்கி வீரச்சாவடைந்த ஈகச்சுடர் திலீபனின் நினைவுகள் வழிநடத்த ஆக்கிரமிப்பாளர்களின் வேட்கையைத் தீக்கிரையாக்கும் எரிமலை என எழுக தமிழர்களே!

எத்தனை எத்தனை ஈகங்கள், எத்தனை எத்தனை வலிகள், எத்தனை எத்தனை இழப்புக்கள் எத்தனை எத்தனை இடப்பெயர்வுகள், எத்தனை எத்தனை துரோகங்கள் - இத்தனைக்கும் விடைகாணாமல் வீறுகொண்டெழுந்த இனம் பின் வாங்காது என அறிவிக்க எழுக தமிழர்களே! ”

(சென்னை)

முள்ளிவாய்க்காலில் பேரழிவைச் சந்தித்தும் மனம் தளராமல் நீதிக்கான நெடும்பயணத்தில் நடைபோடும் ஈழத் தமிழ் சொந்தங்களுக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈழத் தமிழர்களை அழிக்க நினைக்கும் சிங்களப் பௌத்த பேரினவாதிகள் அஞ்சி நடுங்கும்படி 'என்றும் வணங்கா மண்' இதுவென உலகுக்கு அறிவிக்க தமிழ் மக்கள் பேரவை ஒழுங்கு செய்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியைத் தமிழ் மக்கள் வெற்றிபெற செய்ய வேண்டும். ஈழத் தமிழர்களின் விடுதலைக் கனவைப் போற்றியபடி தோள்கொடுத்து நிற்கும் தொப்புள் கொடி உறவுகளாய் தமிழ்நாடு உங்களோடு உணர்வுபூர்வமாக நிற்கிறது என்பதை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

“தாமே முன்மொழிந்து கொண்டு வந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் இரண்டாண்டு, இரண்டாண்டு என்று காலம் கடத்தி அத்தீர்மானத்தைக் காலில் போட்டு மிதிக்கும் இனப்படுகொலையாளர்களை உலகத்தின் முன்பு பொறுப்புக்கூற வைக்காமல் நாங்கள் ஓயப்போவதில்லை” என்பதை சர்வதேச சமூகம் அறிந்து கொள்வதற்கு எழுக தமிழினமே!

தாயகக் கனவினில் சாவினைத் தழுவிய ஆயிரமாயிரம் இளம் காளைகளின் தமிழீழக் கனவைத் தகர்ப்பதற்கு ஆட்லெறிகள் எதுவும் இதுவரை பூமியில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை உலகுக்கு உணர்த்தும்படி எழுக தமிழர்களே!

விடுதலைப் பயிர் வளர்க்க தம் உயிரை விதைத்து மாவீரர்களாய் வரலாற்றில் நிலைபெற்றோர் தம் ஈகங்களும் விடுதலைப் போரில் அப்பாவிப் பொது மக்கள் ஆயிரமாயிரம் உயிரை விட்டதும் வீண் போகவிடாமல் தடுக்க வீறுகொண்டு எழுக தமிழர்களே!

"வெற்றி பெற்று விட்டோம்" என்ற இறுமாப்பில் தமிழ் மண்ணெங்கும் பௌத்த விகாரைகளை நிறுவியும் "வளர்ச்சித் திட்டங்கள்" என்ற பெயரால் தமிழ் மண்ணை ஆக்கிரமித்தும் சிங்கள பௌத்தமயமாக்கும் பேரினவாதிகளின் கட்டமைப்பு ரீதியான இன அழிப்புக்கு எதிராய் 'உடல்கள் வேறு உணர்வுகள் ஒன்று' என்று எழுக தமிழர்களே! ஆண்டுகள் பத்து உருண்டோடிவிட்டதால் 'சோர்ந்து விடுவோம்' என்றெண்ணி வெற்றிக் கூக்குரல் இடுவோரின் கொட்டம் அடக்க ஆழிப் பேரலை போல் எழுக தமிழர்களே!

போர்க் குற்றச்சாட்டு காரணமாக ஐ.நா. அமைதிக்காப்புப் படையில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக்கி உலகின் கண்களில் மண்ணைத் தூவி இனப்படுகொலைக்குப் பரிசளித்து மகிழும் சிங்கள ஆட்சியாளர்களின் குலைநடுங்க கொப்பளிக்கும் கோபத்தோடு எழுக தமிழர்களே!

மக்களிடம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் அடியெடுத்து வைத்துவிட்டு எதிரிகளின் பகடைக் காயாக மாறிப் போன தமிழ்த் தலைவர்களுக்கு இறுதி எச்சரிக்கை ஒலி எழுப்ப எழுக தமிழர்களே!

உள்நாட்டு விசாரணையென்று உலகை ஏய்த்துவரும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு உற்ற துணையாய் நின்று தமிழர்களின் கண்ணில் குத்தும் காரியத்தை செய்வோரின் துரோகப் படலத்திற்கு முடிவுகட்ட எழுக தமிழர்களே!

நம்மை கிள்ளிக் கீரையாய் மதித்து இயன்றவரை வளைக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பிராந்திய வல்லரசுகளும் உலக வல்லரசுகளும் தமிழர்களின் போராட்ட உறுதியை அறிந்தேற்கும்படி அணிஅணியாய் திரள்க தமிழர்களே!

சிதறிக் கிடக்கும் தமிழ்த் தலைவர்களை ஓரணியில் நிறுத்தும் வரலாற்று சக்தியாய் தமிழ் மக்கள் பேரவையின் 'எழுக தமிழ்' பேரணி அமையட்டும்!

கொத்துக் குண்டுகளாலும் ஆட்லெறிகளாலும் உணவு, மருந்து பொருட்களைக் தடுத்ததாலும் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று வகை தொகையின்றி ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தவர்களை நீதியின் முன் நிறுத்தாமல் ஓயமாட்டோம் என உலகிற்கு சொல்வதற்கு எழுக தமிழர்களே!

மீண்டும் வருவோம் என்ற நம்பிக்கையோடு எதிரியிடம் கையளிக்கப்பட்டதால் ஆயிரமாயிரமாய் காணாமலடிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி எழுக தமிழர்களே! என அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமும் ஒற்றுமையாகத் திரண்டெழ வேண்டும்

## தொல்.திருமாவளவன் அறைகூவல்



(சென்னை)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இன்று 16 ஆம் திகதி தமிழீழம் உட்பட உலகம் முழுவதும் நடைபெறும் 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணியின் கோரிக்கைகள் வெற்றி பெற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அக்கட்சியின் தலைவரும் சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

தமிழர்களின் பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கிரமிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். சர்வதேச போர்க் குற்ற விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நம்பத்தகு விசாரணைகள் நடைபெற வேண்டும். வடக்கு -கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும். இடம்பெயர்ந்த- புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் அனைவரையும் அவரவருக்குரிய பாரம்பரிய காணிகளில் மீள்குடியமர்த்த வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பேரணி இன்று நடக்கிறது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த எழுச்சிப்பேரணியில் பங்கேற்க வேண்டுமென தமிழ்ச் சொந்தங்கள் யாவருக்கும் அழைப்பு விடுத்துள்ள தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் இம்முயற்சி வெற்றிபெற வா்ழ்த்துகின்றோம்.

போர்க்குற்றம் மற்றும் இனக் கொலை தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் பன்னாட்டுப் பொறிமுறை விசாரணை நடத்த வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தி ஏற்கனவே விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் மாபெரும் கையெழுத்து இயக்கம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளோம் என்பதைத் தமிழ்ச்சமூகம் நன்கு அறியும்.

தற்போது அதே கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் இந்த எழுச்சிப்பேரணி வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துவதோடு, தமிழகத்தில் நடைபெறும் எழுகதமிழ் எழுச்சிப் பேரணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் பங்கேற்கிறது என அறிவிக்க கடமைப்பட்டு இருக்கின்றோம்.

ஐ.நா. பேரவை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறத்தக்க வகையில் ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகமும் ஒற்றுமையாகத் திரண்டெழ வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஓவலில் ஒளிர்ந்தது இங்கிலாந்து

## ஆஷஸ் தொடர் சமனிலையானது

### பிரோட், லீச் அசத்தல் பந்துவீச்சு

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது ஆஷஸ் டெஸ்டில் இங்கிலாந்து அணி 135 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம், தொடர் 2-2 என சமன் ஆனது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் நான்கு போட்டிகள் முடிவில், அவுஸ்திரேலியா 2-1 என முன்னிலையில் இருந்தது. ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் லண்டன் ஓவலில் நடந்தது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 294, ஆஸ்திரேலியா 225 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 8 விக்கெட்டுக்களை இழந்து 313 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. கம்மின்ஸ் 'வேகத்தில்' ஆர்ச்சர் (3) ஆட்டமிழந்தார். லீச் 9 ஓட்டங்களில் திரும்பினார். இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 329 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக லியன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**வோர்னர் ஏமாற்றம்**

399 ஓட்டங்கள் இலக்குடன் அவுஸ் அணி இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்தது. மார்கஸ் ஹரிஸ், வோர்னர் ஜோடி மீண்டும் ஏமாற்றியது. பிரோட் பந்தில் ஹரிஸ் (9) போல்டானார். மீண்டும் வந்த பிராட் இம்முறை வோர்னரை (11) வெளியேற்றினார். லபுசேன், ஸ்ரீவ் ஸ்மித் ஜோடி மீது சுமை அதி கரித்தது. மூன்றாவது விக்கெட்டுக்கு 27 ஓட்டங்கள் எடுத்தபோது, லீச் 'சுழலில்' லபுசேன் (14) சிக்கினார்.

**வேட் சதம்**

பிரோட் பந்தில் ஸ்டீவ் ஸ்மித் 23 ஓட்டங்களில் திரும்பினார். லீச் பந்துவீச்சில் வேட் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்தார். மிட்சல் மார்ஷ் (24), கேப்டன் பெய்ன் (21) விரைவில் அவுட்டாகினர். பொறுப்புடன் விளையாடிய வேட் சதம் கடந்தார். பிரோட் பந்தில் கம்மின்ஸ் (9) ஆட்டமிழந்தார். ரூட் 'சுழலில்' மத்யூ வேட் (117) சிக்க, தோல்வி உறுதியானது. மற்றவர்கள் ஏமாற்ற, அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் 263 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டாகிதோல்வியடைந்தது. இங்கிலாந்து சார்பில் அதிகபட்ச மாக பிரோட், லீச் தலா 4 விக்கெட் கைப்பற்றினர்.

இதனையடுத்து, ஐந்து போட்டிகள் கொண்ட தொடர் 2-2 என சமன் ஆனது



ஆஸி அணியை தனது பந்துவீச்சால் சிதறடித்த இங்கிலாந்தின் பிரோட் விககெட் ஒன்றை கொய்த மகிழ்ச்சியில்...




வெற்றிக் கிண்ணத்துடன் குதூகலிக்கும் ஆஸி வீரர்கள்

**7** நேற்று, இங்கிலாந்தின் பிரோட் 'வேகத்தில்' வோர்னர் ஆட்டமிழந்தார். இதன் மூலம், நடப்பு தொடரில் 10 இன்னிங்சில் 7ஆவது முறையாக இவரிடம் வோர்னர் சிக்கினார்.

**5** நடப்பு தொடரில் நான்கு போட்டியில், ஸ்மித் மொத்தம் 774 ஓட்டங்கள் சேர்த்தார். இதனையடுத்து, ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்கள் சேர்த்தவர்கள் பட்டியலில் 5வது இடத்தை பிடித்தார். முதலிரண்டு இடங்களில் முறையே அவுஸ்திரேலிய ஜாம்பவான் பிரட்மன் (974 ஓட்., 1930), இங்கிலாந்தின் ஹேமண்ட் (905 ரன். 1928-29) உள்ளனர்.

◆ நடப்பு தொடரில் 8 இன்னிங்சில் ஸ்மித் அரை சதம் அடிக்காமல் (23 ஓட்.). ஒரு இன்னிங்சில் மட்டுமே ஆட்டமிழந்துள்ளார்.

**774** நடப்பு ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவின் ஸ்மித் 774 ஓட்டங்கள் குவித்தார். இதன்மூலம், ஒரு டெஸ்ட் தொடரில் தனது அதிக பட்ச ஓட்டத்தை பதிவு செய்தார். இதற்கு முன், 2014-15ல் இந்தியாவுக்கு எதிராக 769 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

## முதல் ரி20 மழையால் இரத்து



இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் 'ரி20' போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டது.

இந்தியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி மூன்று 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி இமாச்சலப்பிரதேசத்தின் தர்மசாலா நகரில் நேற்று நடப்பதாக இருந்தது. மதியம் மூன்று மணி முதல், மழை பெய்தது. இரவிலும் நீடிக்க மைதானம் தார்ப்பாயால் மூடப்பட்டது.

நாணயச்சுழற்சி போடாத நிலையில், மழையின் அளவு அதிகரித்தது. போட்டியை துவங்க மைதானத்தை தயார்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இரவு 7:50 மணிக்கு ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில், போட்டி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப் பட்டது.

இரு அணிகள் மோதும் இரண்டாவது போட்டி வரும் 18ஆம் திகதி மொகாலியில் நடக்கவுள்ளது.

## ஆப்கானிஸ்தான் வெற்றி

முத்தரப்பு 'ரி20' லீக் போட்டியில் அசத்திய ஆப்கானிஸ்தான் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தியது.

பங்களாதேஷில் முத்தரப்பு 'ரி20' கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் பங்களாதேஷ், சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான் அணிகள் பங்கேற்கின்றன.

டாக்காவில் நடந்த 3வது லீக் போட்டியில் ஆப்கானிஸ்தான், வங்கதேசம் அணிகள் மோதின.

**நபி விளாசல்**

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த ஆப்கானிஸ்தான் அணிக்கு ரஹ்மானுல்லா குர்பாஜ் (0), ஹஜ்ரதுல்லா ஜஜாய் (1) ஜோடி ஏமாற்றியது. நஜீப் (11), நஜிபுல்லாஜத்ரன் (5) நிலைக்கவில்லை. அஸ்கர் ஆப்கன் (40) ஆறுதல் தந்தார். குல்பதின் நைப் (0) சொதப்பினார். அபாரமாக ஆடிய முகமது நபி, சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். சவுமியா சர்கார் வீசிய 18ஆவது ஓவரில் 2 சிக்சர்கள், 2 பவுண்டரிகள் அடித்த இவர், அரைசதம் கடந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் ஆப்கானிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது. மொகமட் நபி (84 ஓட்., 54 பந்து, 7 சிக்சர், 3 பவுண்டரி), கரீம் ஜனத் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் மொஹமட் சைபுதின் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**சகிப் ஏமாற்றம்**

சவாலான இலக்கை விரட்டிய வங்கதேச அணிக்கு லிட்டன் தாஸ் (0), முஷ்பிகுர் ரஹிம் (5) ஏமாற்றினர். அணித் தலைவர் சகிப் அல் ஹசன் (15), சௌமியா சர்கார் (0) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய மகமதுல்லா (44), சபிர் ரஹ்மான் (24) ஓரளவு கைகொடுத்தனர். மற்றவர்கள் ஏமாற்ற,

பங்களாதேஷ் அணி 19.5 ஓவரில், 139 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பில் முஜீப் உர் ரஹ்மான் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# சிறுவர் கழக நிர்வாகத் தெரிவு



(சாவகச்சேரி)

நாவற்குழி 300 வீட்டுத் திட்டம் பகுதியிலுள்ள இளந்தளிர் சிறுவர் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை மாலை இளந்தளிர் சனசமூக நிலையக் கட்டடத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய தலைவராக சிவநேசனும், செயலாளராக ஆர்த்திகா,பொருளாளராக பிரியங்கா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-30)

# எழுக தமிழுக்கு யாழ்.மாவட்ட பாரவூர்தி சங்கம் ஆதரவு

(கொழும்பு)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மாபெரும் மக்கள் எழுச்சி போராட்டத்துக்கு யாழ். மாவட்ட பாவூர்தி சங்கம் தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கு அனைத்து தமிழ் மக்களும் ஒன்று கூடி ஓரணியில் தமது கோரிக்கைகளை இந்த ஏழுக தமிழ் பேரணி மூலம் சர்வதேசத்துக்கும் அரசுக்கும் கூறவேண்டும். பேதங்களை மறந்து ஒற்றுமையாக ஒன்று கூடுவோம் என வேண்டுகோள் விடுத்துள்ளது. (9)


## உங்கள் மனநிலை

யாருடனாவது பேசவேண்டும்
போல இருந்தால், தயங்காமல் எம்மை
அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.

எமது அமைப்பில் மதமும், அரசியலும் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது ரகசியம் பேணுவோம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)

077 900 8776 ( தினமும் மு.ப 9.00 - பி.ப 1.00 )

(C-7620)



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

(C-7616)

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**

கண்டி, அம்பத்தன்ன -077 939 5222

Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# வெற்றி-புகழ்-செல்வம் தரும் அதிர்ஷ்ட ஜோதிட சாஸ்திரம்

## உங்களின் பிறந்த திகதியும் வாழ்க்கையும்



## 4,13,22,31 ஆம் திகதியில் பிறந்தவர்கள்:

இராகு காலத்தின் ஆதிக்கம், ஆட்சியுடையவர்கள் அதிகாரம், கௌரவம், ஆதிக்க எண்ணம், இவை கலந்த சக்தி இவர்கள் இரத்தத்தில் கலந்திருக்கும். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற எண்ணம் உடையவர். தான் சொன்னது சரி என்று அனைவரும் ஒத்துக்கொள்ள நல்ல ஆராய்ச்சியாளர். எந்த விடயத்தையும் நன்கு ஆராய்ந்து தான் எடுத்த முடிவு சரியானது என 100வீதம் சரி பார்த்த பின் அந்த காரியத்தில் ஈடுபடுவர். புதிய கருத்துக்களை உருவாக்கவும் மற்றவர் மனதில் அதை பதிய வைக்கவும் முயற்சி செய்வர். தனக்கு சரி என்று எது படுகிறதோ அதை மட்டுமே செய்வர். நாலு விடயமும் தெரிந்தவர் என்று ஒருவரை பற்றிச்சொன்னால் அது இவர்களாகத்தான் இருக்கும். இந்த எண்ணின் ஸ்ரீ கணபதி பஞ்ச பூதங்களில் இவ்வெண் பிருத்வி அம்சத்தைக் குறிக்கும். அதிக படிப்பறிவில்லாதவர்களாக இவ்வெண்தாரர் இருந்தால், திண்ணைப் பேச்சு வீரர் என்று பெயரெடுப்பர். நல்ல உஷாராண பேர் வழிகள். 4ஆம் திகதி பிறந்தவர் கண்டிப்பு மிகுந்தவர். 13 ஆம் திகதி பிறந்தவர் கடன் தொல்லையால் அவதியுறுவர். 22 ஆம் திகதி பிறந்தவர் மற்றவர்களுக்கு தொல்லை தருபவராக சூதாடுதல், ரேஸ், பந்தயம், லொட்டரி, சீட்டு இவற்றில் மோகம் கொண்டிருப்பர். 31 ஆம் திகதி பிறந்தவர் எப்பேற்பட்ட எதிரியையும் பேச்சில் மடக்கி விடுவர்.

# இராசி பலன்

**மீனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**மேடம்:** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சுற்றத்தாரின் வருகையுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்:** தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** மனநிறைவு கூடும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் அத்தம் | | சூரி, செவ் |
| சனி, கேது | குரு | | சுக், புத |

16.09.2019
ஆவணி 30, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.27 மணிக்கு
துதியை பிற்பகல் 1.55 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.25 மணிவரை
சுபநேரம் 12.03-1.33மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை

வளவன்

**கடகம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மகரம்:** உள்ளம் மகிழும் சம்பவமொன்று இல்லத்தில் இடம்பெறலாம், தொழில்ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், உற்சாகமான நாள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** வாகன சுகமுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், மங்கலகரமான தகவல்கள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.


**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, காலைப்பொழுதே கலகலப்பன தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கடன் பாக்கிகளை கொடுத்து உதவும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும், குடும்பத்தினரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்று ஆரம்பம்







(யாழ்ப்பாணம்)
தியாக தீபம் திலீபனின் 32 ஆவது நினைவேந்தல் நேற்றுக் காலை நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது. (இ-10)

# தனியார் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் ஆயிரம் முறையேனும் பேசத் தயார்

## ஆளுநர் ராகவன் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழிலுள்ள தனியார் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் ஆயிரம் முறையேனும் பேசி ஒரு அங்குலக் காணியைக் கூட விடுவிக்க முடியுமானால் நான் பேசத் தயாராக இருக்கிறேன் என வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தனியார் காணிகள் விடுவிப்புத் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


யாழ்.மாவட்ட தற்போதைய கணக்கீட்டின்படி 3028 ஏக்கர் தனியார் காணிகளைப் பாதுகாப்புத் தரப்பினர் கைப்பற்றி வைத்துள்ளனர்.



இராணுவம் 2054.75 ஏக்கர், கடற்படை 274.57 ஏக்கர், விமானப்படை 646.50 ஏக்கர், பொலிஸ் 52.53 ஏக்கர் என சுவீகரித்து வைத்துள்ளது.

தமிழ் மக்களின் யுத்த இழப்புக்கள் தொடர்பில் நான் கதைக்க முடியாது என்றாலும் கூட அம் மக்களின் துன்பங்களை அறிந்தவன் என்ற ரீதியில் அவர் களின் எதிர்கால வாழ்வுக்கு என்னாலான பங்களிப்பை வழங்கு வேன்.

எனவே தற்போது தனியார் காணி விடுவிப்புத் தொடர்பில் ஆரம்பக் கலந்தாலோசனைக் கூட்டத்தை நடத்தியுள்ளோம். கூட்டங்கள் பல நடைபெற்றும் காணி விடுவிப்பு முழுமையாக இடம் பெறவில்லை என்ற ஆதங்கம் பலருக்கு இருக்கும். இருந்தாலும் எத்தனை தடவை பேசியேனும் ஒரு அங்குலக் காணியை விடுவிக்க முடியும் என்றால் நான் பேசுவதற்குத் தயாராகவுள்ளேன் என ஆளுநர் மேலும் உறுதியளித்தார். (ஜ-10)




# வலி.கிழக்கு வாழைக்குலைச் சங்க வருமானம் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதில்லை

(யாழ்ப்பாணம்)
வலி.கிழக்கு நீர்வேலி வாழைக்குலைக் கூட்டுறவுச் சங்கத்தின் வருமானம் விவசாயிகள் நலன் சார் திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்காத நிலையில் குறித்த சந்தையால் வருடத்தில் பெறப்படும் பல இலட்சம் ரூபாய் வருமானத்தில் சபைக்கு 3 ஆயிரம் ரூபா மட்டும் வரிப் பணம் செலுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டது.

வலி.கிழக்குப் புத்தூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குறித்த வாழைக்குலைச் சங்கத்தால் பல வருடங்களாக சபையின் சட்ட திட்டங்களை மீறி வரி அறவிடப்படுவதாகவும் குத்தகை நடைமுறையை மீறி நடத்தப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

2015-2016 வரையான காலப் பகுதியில் சுமார் 44 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டிய கூட்டுறவுச் சங்கமாக குறித்த வாழைக்குலைச் சங்கம் காணப்பட்ட நிலையில் செலவும் கழிக்கப்பட்டு ஏறக்குறைய 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் தேறிய வருமானம் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு சந்தைக் குத்தகைப் பணமாக 3 ஆயிரம் ரூபாய் மட்டும் செலுத்தப்பட்டது.

சாதாரணமாக ஒரு பெட்டிக் கடை நடத்துபவரிடம் ஒரு வருடத்துக்கு ஆயிரத்து 500 ரூபாய் தொடக்கம் நடுத்தரக் கடைக் காரரிடம் மூவாயிரம் ரூபாய் வரை அறவிடப்படும் நிலையில் வருடவருமானம் 44 இலட்சத்தை ஈட்டும் சங்கத்திடம் 3 ஆயிரம் அறவிடப்படுவது எவ்வாறு? எனப் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-10)

# விமான நிலையம் அமைக்கப்பட்டபின் விளையாட்டு மைதானம் அமைக்கப்படும்

## அர்ஜுன உறுதி; ஆனல்ட் தகவல்




(யாழ்ப்பாணம்)
யாழ். மண்டைதீவில் சர்வதேசத் தரத்திலான கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உறுதியளித்ததாக யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.தீவகப் பகுதிகளை வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் திட்டத்தில் மண்டைதீவுப் பகுதியில் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 100 ஏக்கர் காணியில் குறித்த சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.பலாலி சிவில் விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் முடிவுற்ற பின் இந்த விளையாட்டு மைதானத்திற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இத் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்டத்தின் சுற்றுலாத்துறை வளர்ச்சி அடைவதோடு துணை நகரங்கள் தீவகப் பகுதியில் உருவாக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கட்டுரை, இலக்கிய நயத்தலில் தேசிய மட்டத்தில் முதலாமிடம்



(கரணவாய்)
நெல்லியடி மத்திய கல்லூரி மாணவன் சி.கஜன் தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு-4 கட்டுரை வரைதலும் இலக்கிய நயத்தலும் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். (இ-60)

# மக்கள் திரள் எழுச்சியால் நீதியின் கதவுகள் திறந்தே தீரும்

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு ஆதரவாக சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதிகள் கூட்டறிக்கை

(சென்னை)

ஈழத் தமிழர்தம் துயரம் சொல்லில் விபரிக்க முடியாதது. தமக்கென்று தனியான வரலாறு, தனியான அரசு, செழுமைமிக்கப் பண்பாடு, மொழி வளம் நிலப்பரப்பு என யாவும் கொண்ட தனித்துவமான மக்கள் கூட்டத்தின் வாழ்வில் குறுக்கே வந்தது பிரித்தானியாவின் காலனியாதிக்கம். தீவை விட்டகன்ற பிரித்தானியா தனது புவிசார் அரசியல் நலனுக்காக சிங்கள பௌத்த பேரினவாதத்திடம் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஒப்படைத்து சென்றது. 1948 முதல் இன்றைக்கு வரை இலங்கை தீவைப் பௌத்தமயமாக்கும் பேரினவாத நிகழ்ச்சிநிரலில் ஈழத் தமிழினம் அழிக்கப்பட்டு வருகிறது.

திட்டமிட்ட கலவரங்கள், பௌத்த மயமாக்கல், இன ஒடுக்குமுறைச் சட்டத் திருத்தங்கள், மொழி ஒடுக்குமுறை, இன மேலாதிக்க யாப்பு, நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி பதவி, பயங்கரவாத தடுப்புச் சட்டம், இராணுவமயமாக்கல் என இன அழிப்பின் பரிமாணங்கள் விரிந்து சென்றன. அதில் ஒரு மைல்கல்லாய் முள்ளிவாய்க்காலில் இரத்தம் பெருக்கெடுத்து ஓட இலட்சக் கணக்கான தமிழர்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டனர் என தமிழ்நாடு சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகள் கூட்டாக அறிக்கை விடுத்தனர்.

தமிழீழ தனியரசு கோரிப் போராடிய தமிழர்களது போராட்ட நியாயம் உலகத்தால் ஏற்கப்படவில்லை. பிராந்திய வல்லரசுகளும் உலக வல்லரசுகளும் உரிய அரசியல் தீர்வு காண உதவவில்லை.

இனப் படுகொலையைத் தடுக்கவில்லை என்பதோடு இன அழிப்புக்குத் துணைப்போயின. இன அழிப்பில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தமிழீழ மக்களுக்கு சுதந்திர அரசு இன்றியமையாதது என்பதை முள்ளிவாய்க்கால் ஓலங்கள் உணர்த்தி நிற்கின்றன. தமிழர்களுக்கு இழைக்கப்பட்டு வருவது திட்டமிட்ட இனப் படுகொலை என்று உலகத்தை ஏற்க செய்து ஈடுசெய் நீதி காணும் போராட்டத்தில் ஈழத் தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் தமிழ்நாட்டு தமிழர்களும் உறுதியாய் நிற்கக் காண்கிறோம். அந்த உறுதியை வெளிக்காட்டும் முகமாய் காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ் மக்கள் பேரவையால் முன்னெடுக்கப்படும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் திரளும் அனைத்து அரசியல் மற்றும் சிவில் தலைமைகளுக்கும் ஒன்று கூடவிருக்கும் பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்களுக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

இலங்கை அரசானது பன்னாட்டுச் சட்டங்களைக் காலில் போட்டு மிதித்தது மட்டுமன்றி சொந்த நாட்டுச் சட்டங்களையும் மதிக்காதவர்கள் தாம் சிங்களப் பேரினவாதிகள் என்பதைக் கடந்த ஆண்டு இறுதியில் உலகம் கண்டது.

உள்நாட்டு விசாரணை என்று உலகை ஏமாற்றிவரும் இலங்கையின் நீதி பரிபாலனமுறை எப்படிப்பட்டது என்பதை 2005 இல் திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் படையினரால் கொல்லப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் கடந்த ஜூலையில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டமை காட்டிநிற்கின்றது.

ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் பொறுப்புக்கூறலுக்கான தீர்மானங்களை தாமே கொண்டு வந்து அதை ஏற்றுக்கொள்ளும் இலங்கை அரசு உள்நாட்டில் போர்க்குற்றம் செய்த படைத் தலைவர்களுக்கு பதவி உயர்வு தந்து பாராட்டுகிறது.

போர் நடந்த போது 58ஆவது படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கிய சவேந்திர சில்வா பல் வேறு மனித உரிமை அறிக்கைகளிலும் போர்க்குற்றங்களுக்காகவும் மானுட விரோதக் குற்றங்களுக்காகவும் குற்றஞ்சாட்டப்பட்டவர். அவருக்குத் தான் இராணுவத் தளபதி பதவி உயர்வு தந்திருக்கிறது இலங்கை அரசு.

இலங்கை தீவின் அரசமைப்புச் சட்டம், நீதித்துறை, புலனாய்வு நிறுவனங்கள், ஊடகம், அரசியல் தலைமை என அனைத்து நிறுவனங்களும் இன அழிப்புக்கும் இன அழிப்பு செய்வோரைப் பாதுகாப்பதற்கும் உறுதி பூண்டுள்ளன.

சிங்கள பௌத்தப் பேரினவாதம் தமிழர்களுக்கு நீதி வழங்கவோ அரசியல் தீர்வு கொடுக்கவோ மாட்டாது என்பதை முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான இப் பத்தாண்டுகளும் பளிச்சென்று காட்டி நிற்கின்றன.

ஆனால், இலங்கை அரசின் உண்மையான முகத்தையும் எழுபது ஆண்டுகால ஏமாற்று வரலாற்றையும் தொடர்ந்து வரும் கட்டமைப்பு ரீதியான இன அழிப்பையும் எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்களின் அரசியல் விருப்பத்தையும் உலகத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளோ அதை செய்யத் தவறிவிட்டனர்.

இதுதான் எல்லாத் துயரங்களிலும் பெருந்துயரமாக தமிழ் மக்களின் தலைகளில் விழுந்துள்ளன. இந்த நிலை மாற வேண்டும்.

தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தை சமரசமின்றி வெளிப்படுத்தி உலகத்தின் முன்பு கொண்டு செல்ல வேண்டிய கடமையை நிறைவேற்றும் அரசியல் தலைமையைக் கட்டியெழுப்புவதே இன்றைக்கு ஈழத் தமிழர்கள் முன்விரிந்து கிடக்கும் முதற்பணி. அந்தப் பணியை செய்வதில் ஒரு மைல்கல்லாக இந்த மக்கள் திரள் எழுச்சி அமையும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

மக்களின் கோரிக்கைகள் சட்ட வடிவம் பெறுவதும் சட்டத்தில் இருக்கும் உரிமைகள் மக்களுக்குப் பயன்படுத்துவதும் தானாக நடந்து விடுவதில்லை. கோடிக் கணக்கான மக்களின் விடாப்பிடியான போராட்டத்தாலும் கண்ணீராலும் இரத்தத்தாலும் சட்டங்கள் உயிர் பெறுகின்றன.

எனவே, ஈழத் தமிழர்களின் போராட்ட அழுத்தமே சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு உயிர் கொடுத்து ஈழத் தமிழர்களைப் பாதுகாத்து நிற்கப் போகின்றது. தனித்து விடப்பட்டோம் என்று ஈழத் தமிழர்கள் கலங்கி நிற்க வேண்டாம்.

புலம்பெயர் வாழ் தமிழர்களும் தமிழ்நாட்டு மக்களும் உலகம் முழுவதும் நீதியின்பாற் பற்றுக் கொண்டு ஒடுக்கப்பட்டோருக்காக உழைத்து வருவோரும் உங்களோடு உணர்வுபூர்வமாக நிற்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ் மக்கள் பேரவையின் வரலாற்று சிறப்புமிக்க எழுக தமிழ் எழுச்சிப் பேரணியின் கோரிக்கைகளை ஐ.நா. மன்றமும் இந்தியா அமெரிக்கா, உள்ளிட்ட அனைத்து அனைத்துலக நாடுகளும் உணர்ந்து ஈழத் தமிழர்களிற்கான நீதியை விரைந்து வழங்க முன் வர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

வாய்மையே வெல்லும். நீதியின் ஒளிக்கதிர்கள் விடியலைத் தரும் என நீதிபதி அரிபரந்தாமன், நீதிபதி சண்முகம், நீதிபதி ராஜன், நீதிபதி சிவசுப்பிரமணியன், நீதிபதி அக்பர் அலி ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

---

### வடக்கிற்கு வருகிறார் கோத்தா

## கூட்டணி விவகாரத்திற்கு இரண்டு வாரத்திற்குள் தீர்வு

## டளஸ் நம்பிக்கை

(கொழும்பு)

பரந்துபட்ட கூட்டணி இன்னும் இரண்டு வார காலத்திற்குள் வெற்றிகரமாக உருவாக்கப்படும். தற்போது சின்னம் குறித்து எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளுக்கு எத்தரப்பிற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வு கிடைக்கும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும நம்பிக்கை வெளியிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக பலமான அரசாங்கத்தைத் தோற்றுவித்து நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதே பிரதான நோக்கமாக காணப்படுகின்றது. பொதுஜன பெரமுனவில் அங்கத்துவம் வகிக்கும் பங்காளி கட்சிகளுடனான கூட்டணி இவ்வாரத்திற்குள் "பொதுஜன ஜனநாயக முன்னணி" என்ற பெயரில் உதயமாகும்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ அடுத்த மாதம் வடக்கிற்கு விஜயம் செய்வார். தமிழ் மக்கள் மத்தியில் அவர் தொடர்பில் தவறான சித்திரிப்புக்கள் மாத்திரமே காணப்படுகின்றது. ஒரு இனத்திற்காக மாத்திரம் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்படவில்லை. ஆகவே அனைத்து இனத்தவர்களின் ஆதரவுடன் ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## மங்களவின் நிதி அமைச்சைத் தாருங்கள்

## தயா கமகே ரணிலிடம் பகிரங்க கோரிக்கை




(கொழும்பு)

தனக்கு நிதி அமைச்சுப் பதவியைத் தந்தால் நாட்டின் நிதி நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுத் தருவேன் என அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயற்பாடுகள் செயற்றிறனற்ற விதத்திலேயே காணப்படுவதாக அவர் குற்றம்சாட்டினார்.

சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் 5000 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். இந் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது இடம்பெற்ற கூட்டமொன்றில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர கலந்துகொள்ளாமல் புறக்கணித்திருந்தார். சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக கொண்டுவர வேண்டும் என மும்முரமாக ஈடுபட்டு வருபவர்களில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரரும் ஒருவராவார்.

அத்துடன், சஜித்தை ஆதரித்து மாத்தறையில் பெரும் பொதுக் கூட்டமொன்றை நடத்தியவரும் நிதி அமைச்சர் எனக் கூறப்படுகின்றது. இந்நிலையிலேயே நிதி அமைச்சரவை மாற்றுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---



## அமைச்சர் சஜித் வெற்றிபெற பிரதமர் விடப்போவதில்லை

### மகிந்த அணி கூறுகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ நிறுத்தப்பட்டாலும் அவர் வெற்றிபெற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் சந்திரசேன தெரிவித்தார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி யாரைக் களமிறக்கினாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றியைத்திசை திருப்ப முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சுட்டும் முகநூல்

22

Like Love Haha Yay Wow Sad Angry

**திரியாய் சுதாகரன்**
8 hrs

அரசியலை
புனிதமாகவும்
செய்ய முடியும்,
சாக்கடையாகவும்
செய்ய முடியும்.
நல்லவனுக்கும்
கெட்டவனுக்கும்
நடுவில் அரசியல்.

**ஆதித்தன் ஆதி**
18 hrs

ஒரு நினைவு நாளை ஒரு அஞ்சலி நிகழ்வை ஒரே நேரத்தில் ஒற்றுமையாக நடத்த முடியாத நீங்கள் எப்படி ஒரு தேசத்தை உருவாக்குவீர்கள்!! அரசியல் என்பது இவ்வளவு சாக்கடையா?? அல்லது எங்கள் அரசியல்வாதிகள் இவ்வளவு இழிவானவர்களா?

**Pirasanth Bro**
10 mins

வடகிழக்கில் எழுக தமிழ் நிகழ்வினால் மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் ஒருநாள் பாதிப்புத்தான். அதற்காக ஒட்டுமொத்த இனத்தின் பிரச்சினைக்காக ஒரு நாளை ஒதுக்க முடியாத நிலையிலா எமது தமிழர்கள்??? கட்சிகள், சின்னங்கள் வேண்டாம், இறைமையுள்ள இலங்கையின் பங்காளர்களாக தமிழரின் சமகால பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தும் தளமாக இந்த எழுக தமிழை பயன்படுத்துவதிலுள்ள தவறு என்ன? கடந்த நான்கு வருட நல்லாட்சியில் முண்டு கொடுத்த தமிழ்த் தலைமைகள் பெற்றவைகள் என்ன??? தீர்வு எங்கே?
கூவித்திரிந்த சமஷ்டி எங்கே?
கல்முனை கணக்காளர் எங்கே?
வடகிழக்கு இணைப்பு எங்கே?
ஆனால் உங்களின் பைகள் நிரம்பியது மட்டுமே சாத்தியமாகியது.
உங்களால் செய்ய சாதிக்க முடியாததை உங்களால் செய்ய முடியவில்லை. செய்பவர்களை யாவது செய்ய விடுங்கள்..!
திட்டமிட்ட படி எழுக தமிழ் எழும்..!

**சிவரதன் வயிரவநாதன்**
Yesterday at 08:28

எழுக தமிழ் வேண்டாம் என்றால் அதற்கான தேவைக்குரிய சூழ்நிலையை இல்லாமல் பண்ணி இருக்க வேண்டும். அதைச் செய்ய தவறி விட்டு அதை வேண்டாம் என்பதில் எந்த அர்த்தமும் இல்லை.
# எழுக தமிழ் இனத்தின் எழுச்சி

அன்பு வாசகர்களே! **சுட்டும் முகநூல்** என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.




மறவன்புலவு பிரபாகரனின் கைவண்ணத்தில் உருவாகிய தவளைப் பாய்ச்சல் என்ற புதிய படகு கேரதீவு வாவியடிப் பகுதியில் கடலில் இறக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. தென்மராட்சியில் கடல்சார் சுற்றுலாத்துறையில் அதிக பங்களிப்பை வழங்கும் பொருட்டு கேரதீவு வாடியடியில் கடலில் தவளைப் பாய்ச்சல் என்ற பெயருடைய விளையாட்டு படகின் திரைப்பலகையை சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரனும் படகை உருவாக்கிய மறவன்புலவு பிரபாகரனின் மனைவியும் கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தலைவர் இ.கந்தசாமி ஆகியோர் திரைநீக்கம் செய்தனர். (படங்கள்: சுபேசன், கொடிகாமம் செய்தியாளர்)

## கலாவெவ பூங்காவிற்கு பூட்டு

(கலாவெவ)
கலாவெவ பூங்காவை தற்காலிமாக மூடுவதற்கு நிர்வாகம் தீர்மானித்தது. இரு நாட்களாக பிரதேச வாசிகளுக்கும் கலாவெவ பூங்கா அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் பிரதேச வாசிகள் சிலர் கலாவெவ பூங்காவிற்கு வந்து யானை வெடி வைத்து யானைகளை விரட்டுவதற்கு முற்பட்டனர்.

இதற்கு எதிராக பூங்கா நிர்வாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததோடு, இதனால் நேற்று அந்த பூங்காவிற்குள் நுழையும் நுழை வாயில் மூடப்பட்டு சுற்றுலா பயணிகளுக்கு அங்கு நுழைய இடம் வழங்காது பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# பெரும்பான்மையினர் பின்பற்றுகின்ற பௌத்தத்தின் தோற்றுவாய் இந்தியாவாகும்

## ராஜித சுட்டிக்காட்டு



(கொழும்பு)
இந்தியாவிலிருந்து மகிந்த தேரர் மூலம் தான் இலங்கைக்கு பௌத்த மதம் அறிமுகப்படுத்தப் பட்டது. எனவே இன்று இலங்கையின் பெரும்பான்மை இனமாக விளங்கும் சிங்களவர்களின் தோற்றுவாய் இந்தியாவையே சார்ந்திருக்கின்றது.

வரலாற்று ரீதியாக இருநாடுகளுக்கும் இடையில் நெடுங்காலத் தொடர்பு பேணப்பட்டு வந்திருக்கிறது. அவ்வுறவு மேலும் பலப்படுத்தப்பட்டு, தொடர்ந்து முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இலங்கை முஸ்லிம் மீடியா போரம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு ரமடா ஹோட்டலில் இலங்கை - இந்திய நட்புறவு ஒருமைப்பாட்டு சந்திப்பொன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ)

# எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து கிழக்கிலும் ஹர்த்தாலுக்கு அழைப்பு!

(ஏறாவூர்)

எழுக தமிழ் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து இன்று கிழக்கிலும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவையின் கிழக்குக் குழுவினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டது.




இவ்வாறு வெளியிடப்பட்ட அறிக்கையில், 'ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை மாநாடு ஜெனிவாவில் ஆரம்பித்துள்ள இந்த நேரத்தில், தங்களுக்கான நீதியைப் பெற்றுத்தருவதில் சர்வதேசத்திற்கும் பாரிய பங்குள்ளது என்பதை சர்வதேசத்துக்கு இடித்துரைக்கும் வகையில் தமிழ் மக்களின் முக்கிய ஆறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மண்ணில் இன்று 16 ஆம் திகதி திங்கட்கிழமை 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணியை தமிழ்மக்கள்பேரவை ஏற்பாடு செய்தது.

சிங்கள பௌத்த மயமாக்கல் நிறுத்தப்படல் வேண்டும், சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்படல் வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக் கப்படல் வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்படல் வேண்டும், வடக்கு-கிழக்கில் இராணுவமயமாக்கல் நிறுத்தப்படல் வேண்டும், இடம் பெயர்ந்து அல்லல்படும் மக்கள் அனைவரும் அவர்களது சொந்த நிலங்களில் குடியமர்த்தப்படல் வேண்டும் என்பனவே அக்கோரிக்கைகளாகும்.

வடக்கு-கிழக்கு தழுவியதாக தமிழர் தாயகமெங்கும் எழுக தமிழுக்கான ஆதரவு பல்வேறு தளங்களில் இருந்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ஆதரவுத்தளத்தை ஒருங்கிணைத்து எழுக தமிழை பேரெழுச்சியுடன் முன்னெடுக்க ஏதுவாக வடக்கு- கிழக்கு தழுவிய தான பூரண கதவடைப்பிற்கு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்தது.

அத்தருணத்திலே 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணிக்கு கிழக்கு மக்கள் தங்களது முழு ஆதரவை தெரிவிக்குமுகமாகவும் பேரணியை வலுவூட்டுமுகமாகவும் இன்று கிழக்கு முழுவதிலும் பூரண கதவடைப்பை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்' எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# மெக்சிக்கோவில் கிணற்றிலிருந்து 44 பேரின் உடல்கள் மீட்பு

(மெக்சிக்கோ சிட்டி)

மெகசிக்கோவின் ஜலிஸ்கோ மாநிலத்தில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மனித உடற்பாகங்களில் 44 பேரின் உடல்களை தடயவியல் வல்லுநர்கள் அடையாளம் கண்டுள்ளன்ர்.

கிணற்றிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அதன் அருகே உள்ள குடியிருப்புகளில் வசிப்பவர்கள் முறைப்பாடு அளித்ததற்கமைய அந்தக் கிணற்றை சோதனை இட்டதிலிருந்து மனித உடல்களின் சிதிலங்கள் 119 கறுப்புப் பைகளில் கட்டப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

குறித்த மனித உடல்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டுள்ளதால், அவற்றை அடையாளம் காண்பதில் சிக்கல் நிலவியது.

இதனையடுத்து அந்தப் பகுதியில் காணாமல் போனவர்களின் உறவினர்கள், உடல் பாகங்களை அடையாளம் காண தடயவியல் நிபுணர்களை அனுப்புமாறு அரசுக்குக் கோரிக்கை வைத்தனர்.

அதற்கமைய அங்கு சென்ற நிபுணர்கள் 44 பேரின் உடல்களை அடையாளம்கண்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கிடையிலான சண்டையில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் குறித்த கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# புதிதாக மூன்று உறுப்பினர்கள் அடுத்த வாரம் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களாக சாந்த பண்டார, எச்.எச்.டீ.பீ. ஹேரத் மற்றும் மனோஜ் சிறிசேன ஆகியோர் அடுத்த வாரத்துக்குள் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சாந்த பண்டார மீண்டும் அக்கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகவே நியமனம் செய்ய ப்படவுள்ளார்.


குருநாகல் மாவட்ட எம்.பி. சாலிந்த திஸாநாயக்கவின் மரணத்திற்குப் பின் ஏற்பட்ட இடைவெளிக்கு சாந்த பண்டாரவுக்கு வர முடியாது எனவும், அவ்விடத்துக்கு பட்டியலின்படி ஹேரத்தை நியமிக்குமாறும் குருநாகல் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி அறிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாத்தறை மாவட்ட எம்.பி. சந்திரசிறி கஜதீரவின் மறைவின் பின்னர் ஏற்பட்ட இடைவெளிக்கு மனோஜ் சிறிசேன பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வேட்பாளர்களின் பட்டியலில் முன்னணியில் உள்ள மனோஜ் சிறிசேனவை தெரிவு செய்துள்ளதாக கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வர்த்தமானி அறிவிப்பில் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீக்கினால் சட்ட நடவடிக்கை

## எஸ்.பி.எச்சரிக்கை



(கொழும்பு)

தன்னைக் கட்சியிலிருந்து நீக்கினால் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க எச்சரித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தில் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட 5 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

இன்னும் ஓரிரு தினங்களில் இவர்களது கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக தெரிவான இந்த ஐவரில், இருவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

மற்றும் மூவர் பொதுஜன பெரமுனவில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டனர். டிலான் பேரேரா, லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோரே பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டவர்கள் ஆவார். (இ-7)

# தியாகி திலீபனின் நினைவேந்தல் கிழக்கிலும் நேற்று ஆரம்பம்





(வெல்லாவெளி)

தியாகச்சுடர் திலீபனின் 32வது ஆண்டு நீங்காத தியாக வணக்க ஆரம்ப நாள் நினைவு கிழக்கு மாகாணத்திலும் இடம் பெற்றது. மட்டக்களப்பு வெல்லாவெளியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த நிகழ்வு இடம் பெற்றது.

வெல்லாவெளி ஜனநாயகப் போராளிகள் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நினைவுச்சுடர் ஏற்றி தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது. (ஐ)

# சஜித்துக்கு ஆதரவு வழங்கிய 55 பேரில் 20 பேர் ரணில் பக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை நியமிக்குமாறு கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு மகஜர் வழங்கிய எம்.பி.க்களில் குழுவொன்று, தற்பொழுது ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக்குமாறு மகஜர் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களுடனான சந்திப்பின் போது ரணில் விக்கிரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

சஜித் பிரேமதாஸவை வேட்பாளராக நியமிக்குமாறு வழங்கிய மகஜரில் 55 பேர் ஒப்பமிட்டிருந்ததாகவும் இதில் தற்பொழுது 20 பேர் தன்னை நியமிக்குமாறு எழுத்து மூலம் அறிவித்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது. (இ-7)

# தியாக தீபம் திலீபனின் 32 ஆம் ஆண்டு நினைவேந்தல்





(மன்னார்)

தியாக தீபம் திலீபனின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை மன்னார் மாவட்ட தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில்,அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் மன்னாரில் இடம் பெற்றது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தியாக தீபம் திலீபனின் படத்துக்கு மலர் மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் திலீபனின் நினைவுப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் மதத்தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள்,உயிரிழந்த போராளிகளின் உற வுகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-285)

தியாகதீபம் திலீபனின் 32ஆம் ஆண்டு, நினைவுநாள் முல்லைத்தீவு - கள்ளப்பாடு, வடக்கு பகுதியிலுள்ள முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



## தேசிய மட்டப் போட்டியில் முல்லை.மாணவி சாதனை



தேசிய மட்ட தமிழ்த்தின கட்டுரை வரைதல் போட்டியில் முல்லைத்தீவு குமுழமுனை ம.வி மாணவியான பகீரதன் லாசன்ஜா பிரிவு -3இல் இருந்து பங்கு பற்றி முதலாமிடத்தை பெற்றுள்ளார். கொழும்பு இசுறுபாய பத்தர முல்லை கல்வி அமைச்சில் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட தமிழ்த்தின போட்டியில் கலந்து கொண்டிருந்தார். இம் மாணவி தேசிய ரீதியில் இரண்டாவது தடவையாக கட்டுரை வரைதல் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(9-299)

# எழுக தமிழுக்கு பூநகரி வர்த்தகர் சங்கம் ஆதரவு

தமிழ் மக்களின் உரிமைக்காக இன்று யாழ்ப்பாணத்தில் தாயகத்தில் இடம்பெறும் எழுக தமிழ் பேரணிக்கு பூநகரி வர்த்தகர் சங்கம் தமது முழுமையான ஆதரவினை வழங்கியுள்ளது.

பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் அமைந்துள்ள 50 க்கும் மேற்பட்ட கடைகளை பூட்டி எழுகதமிழ் பேரணியில் கலந்து கொண்டு தமது ஆதரவினை வழங்குவதாக வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது. (9-84)

# வறுமை காரணமாக தனது இரு பிள்ளைகளையும் பௌத்த துறவியிடம் ஒப்படைத்த குடும்பஸ்தர்

## வவுனியாவில் சம்பவம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் வசித்து வந்த குடும்பத்தலைவர் ஒருவர் தனது ஆறு மற்றும் ஏழு வயதுடைய இரண்டு ஆண் பிள்ளைகளையும் குடும்ப வறுமை காரணமாக பதுளையிலுள்ள பௌத்த துறவி ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

இந்நிலையில் குடும்பத் தலைவியான தாயார் பொலிஸ் நிலையத்தில் தனது இரண்டு பிள்ளைகளை மீட்டுத்தருமாறு கோரி முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டபோது பௌத்த தேரரிடமிருந்து இரு பிள்ளைகளையும் அழைத்து வருமாறு தாய், தந்தை இருவருக்கும் பொலிஸாரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியாவில் வசித்து வரும் குடும்பம் ஒன்று வறுமை காரணமாக தமது பிள்ளைகளை வளர்த்து எடுப்பதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது. குடும்பத்தலைவர் தனது 6 மற்றும் 7வயதுடைய இரண்டு ஆண் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு மனைவியிடம் உறவினர்கள் வீட்டிற்குச் செல்வதாக தெரிவித்துவிட்டு பதுளையிலுள்ள பௌத்த தேரர் ஒருவரிடம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்து தனது பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு வவுனியா சென்று நடந்த சம்பவத்தை தனது மனைவியிடம் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை கிராமத்திலுள்ள பெண் சமூக ஆர்வலர் ஒருவரிடம் சென்ற குறித்த தாயார் கணவனின் செயற்பாட்டினைத் தெரிவித்து தனது நிலைமைகளைத் தெரிவித்துள்ளதுடன் பிள்ளைகளை மீட்டுத்தருமாறு கோரி அழுது புலம்பியுள்ளார். இதையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளச் சென்றபோது மாமடுவ பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தாயிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து தந்தையை அழைத்த பொலிஸார் அவரிடம் மேற் கொண்ட விசாரணைகளின் பின்னர் பௌத்த தேரருடன் தொடர்பை ஏற்படுத்தி ஒப்படைக்கப்பட்ட இரண்டு ஆண் பிள்ளைகளையும் தாய், தந்தை ஆகிய இருவரிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளதுடன் தாய்,தந்தை இருவரும் அங்கு சென்று இரண்டு பிள்ளைகளையும் அழைத்து வருமாறு பொலிஸாரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (9-299)

# பகுதிநேர கற்கைகளுக்கான விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது அரச மற்றும் தனியார் ஊழியர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கிளிநொச்சி மாவட்டத்தில் பகுதிநேர கற்கை நெறிகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் குடிசார் கணிய அளவையியல் (Quantity Survying), கணனி பட வரைகலை (Draughts person), குளிரூட்டலும் வளி சீராக்கலும் (Ref and Air Conditioning Mechanic) தொழிற்சாலை மின் இணைப்பு (Industrial Wiring), கணனி தகவல் தொழில் நுட்பம் (ICTT), கணனி வன்பொருள் (Computer Hard ware), மோட்டார் சைக்கிள் திருத்தம் (Motor Cycle Mechanic), முச்சக்கர வண்டி திருத்தம் (Three wheeler Mechanic), அழகுக் கலையும் சிகை அலங்காரமும் (Beautician and hair dresser), ஆங்கிலம் (English), சிங்களம் (Sinhala), கொரியன் மொழி (Korian Language), சிறுவர் பராமரிப்பு (Child care), நீர்க்குழாய் பொருத்துநர் (Plumber), உழவு இயந்திர வண்டி திருத்துநர் (Agricuture Equipment Mechanic) போன்ற கற்கை நெறிகளை தொடங்குவதற்காக மேற்படி கற்கை நெறிகளை தொடர விரும்பும் பயிலுநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 155 ஆம் கட்டை, A9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)




# கிளி.உருத்திரபுரம் பகுதியில் சட்டவிரோதமாக உப்பளம் அமைக்கும் தென்பகுதி நிறுவனம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியின் உருத்திரபுரம் பகுதியின் செருக்கன் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனம் சட்ட விரோதமான முறையில் உப்பளம் ஒன்றை அமைத்து வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தென்னிலங்கையைச் சேர்ந்த நிறுவனத்தினால் சட்ட விரோதமான முறையில் உப்பளம் ஒன்று அமைக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு பொது மக்களால் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அங்கு சென்றார்.

குறித்த பகுதியில் அமைக்கப்படும் உப்பளமானது பிரதேச செயலாளர்,பிரதேச சபை மற்றும். மாவட்ட செயலாளர் ஆகியோரின் அனுமதி இன்றி அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த உப்பளம் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டு வருவதால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்படும் நிலையிலும் செருக்கன், பெரியபரந்தன், சாலம்பன் நீவில்,பொறிக்கடவை,உருத்திரபுரம், சிவநகர் இன்னும் பல கிராமங்களின் நீர் உவர் நீராகும் நிலையிலும் சுமார் 3000 மக்களின் வாழ்வு பாதிக்கப்படும் நிலையிலும் உள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சியில் ஆனையிறவு சர்வதேச தரத்தில் வெள்ளை உப்பிற்கு பெயர் பெற்ற குறிஞ்சா தீவு உப்பளம் போன்றவை உள்ள நிலையில் இந்த உப்பளம் இந்தப் பகுதிக்கு தேவையற்ற வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக அங்கு வேலை செய்யும் மக்களிடம் வினவியபோது குறித்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் முன்பு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறித்த நிறுவனத்தின் தலைவர்களுடன் வருகை தந்து கிராமத்தில் கூட்டம் ஒன்றை நடத்தியதாகவும் அந்தக்கூட்டத்தில் 35 பேருக்கு வேலைவாய்ப்பு தருவதாகவும் தமக்கு வழங்கிய வாக்குறுதியின் படியே தாங்கள் வந்து வேலை செய்வதாகவும் குறிப்பிட்டனர். (9)

# எல்லாளன் மன்னனின் பெயரில் கிளிநொச்சியில் மாதிரிக் கிராமம்




(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகள் கடந்த திங்கட்கிழமை அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

அதில் கனகாம்பிகைக் குளம் கிராமத்தின் புதிய மாதிரி கிராமத்திலும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மக்களிடமும் கையளிக்கப்பட்டது.

குறித்த மாதிரி கிராமத்திற்கு தமிழ் மக்களுக்கு பொருத்தமற்ற பெயரை சுட்டுவதற்கு சிலரால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் குறித்த மாதிரி கிராமம் அமைந்துள்ள கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு றெலோவின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளரே செயலாளராக இருப்பதால் தமிழர்களின் வரலாற்றில் முக்கியம் வாய்ந்த தமிழ் மன்னர்களின் ஒருவரான எல்லாளன் மன்னனின் பெயரை சூட்ட வேண்டும் என கருத்தை முன் வைத்தார்.

குறித்த மாதிரிக் கிராமத்திற்கு எல்லாளன் மன்னனின் பெயர் சூட்டுவதில் பல எதிர்ப்புகள் அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும் அக் கிராமத்துக்கு எல்லாளன் சோலை என பெயர் சூட்டப்பட்டது.

இதனை தொடர்ந்து அமைச்சர் மற்றும் அரச அதிகாரிகள் அப் பிரதேச மக்களின் விருப்பத்துடன் எல்லாளன் சோலை என பெயர் பொறிக்கப்பட்டு வீடுகள் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டன. (9)

# மந்துவில் விமானத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவு

## முல்லைத்தீவில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மந்துவில் சந்தை வளாகத்தில் கடந்த 1999 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி இலங்கை விமானப் படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொது மக்களுடைய 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று உணர்வுபூர்வமாக முல்லைத்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னிகுரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பினுடைய ஏற்பாட்டில் குறித்த நிகழ்வுகள் விமான தாக்குதல் இடம்பெற்ற அந்த இடத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களுடைய உறவுகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமோகன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (9-70-281)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா நகர்ப்பகுதியில் மாலை வேளையில் அதிகளவு டெங்கு நுளம்பு பெருக்கெடுத்து வருகின்றன. அதனை அழித்தொழிப்பதற்கு வவுனியா நகர்ப் பகுதிகளில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தினை சுகாதாரத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வவுனியா பஜார் வீதியிலுள்ள வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும், கால்வாய்களுக்குள்ளும், நகரையண்டிய பகுதிகளிலும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை புகை மூலம் விரட்டியழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பைக்கட்டுப்படுத்த பொதுமக்கள், வியாபார நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என சுகாதாரத்துறையினர் கோரியுள்ளனர். (9-299)

# இனத்தின் மீது பற்றிருந்தால் எழுக தமிழில் ஒன்றுகூடுங்கள்

## வவு.நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

தமிழர் என்ற இனரீதியான பற்று இருந்தால் எழுக தமிழ் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும் என வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வர்த்தகர் நலன்புரி சங்கத்தினர், தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தர்கள், வவுனியா நகரசபை தலைவர் ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் மாலை வவுனியா நகரசபை வளாகத்தில் அமைந்துள்ள தவிசாளர் அலுவலகத்தில் அவசரமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே நகரசபை தலைவர் மேறகண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரான எமக்கு இடம்பெற்ற இனப்படுகொலைகள், இராணுவ ஆக்கிரமிப்பு, காணாமல் போனோர் பிரச்சினை போன்ற பல்வேறு விடயங்களை முன்வைத்தே எழுக தமிழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேரணிக்கு வவுனியா வர்த்தகர் சங்கம் மற்றும் வர்த்தகர் நலன்புரிச் சங்கங்களின் ஆதரவை நாம் கோரியிருந்தோம். வர்த்தகர் சங்கம் எமக்கு ஆதரவு வழங்குவதாக ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

வர்த்தகர் நலன்புரி சங்கமானது எமக்கு எதிரான அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது. குறித்த அறிக்கையில் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணத்தினாலேயே முன்னாள் முதலமைச்சரின் பெயர் பாவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான, உரிமைகளை கேட்பதற்கான ஒரு பேரணியாக நடக்க உள்ளதே தவிர விக்னேஸ்வரன் என்ற தனிப்பட்ட ஒருவருக்காக நடத்தப்படவில்லை.

தமிழர் என்ற உணர்வுடன் அனைவரையும் இணைத்துக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் எமக்கு இருக்கிறது. (9-299)






முல்லைத்தீவு - மல்லாவி, பாரதிநகர் அருள்மிகு ஸ்ரீ காளி அம்மன் கோவிலில் சங்கு நீராட்டு நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

# மழையில் கரைந்த கம்பரெலிய வீதிகள்


(மன்னார்)

பல மாதங்களுக்குப் பின்னர் மன்னார் தீவகப் பகுதிக்குள் நேற்று முன்தினம் அதிகாலை தொடக்கம் சாதாரண அளவில் மழை பெய்துள் ளது.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் கம்பரெலிய திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப் பட்ட அநேக உள்ளக கிரவல் வீதிகள் மழைக்கு கரைந்து ஓடியுள்ளதை காணக் கூடியதாக உள் ளது.



சாதாரண மழைக்கே இந்த நிலை எனும் போது வருகின்ற மாதம் மழைகாலம் ஆரம்பிக்க உள் ளதனால் எத்தனை வீதிகள் கரைந்து ஓட உள்ளது என்பது தெரியவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள் ளனர் . (9-285)



**கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் தினப் போட்டியில் கதைப் பாடல் நிகழ்ச்சியில் மன்னார் எருக்கலம்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் குழு முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டது.**

**குறித்த மாணவிகளுக்கான மாபெரும் வரவேற்பு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை பாடசாலை அதிபர் எம். அஸ்மீன் தலைமையில் இடம்பெற்றது.**

**இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் பிரதேச சபையின் தலைவர் எம். முஜாஹிர், பிரதேச சபை உறுப்பினர் மகிசா, பள்ளி நிர்வாகத்தினர், பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு மாணவிகளை கௌரவித்தனர். (9-285)**

# எழுக தமிழ் விழிப்புணர்வு



(நெளுக்குளம்)

எழுக தமிழ் மக்கள் எழுச்சி போராட்டத்திற்காக மக்களை அணி திரட்டும் முகமாக விழிப்புணர்வு பேரணி நேற்று முன்தினம் வவுனியா வடக்கில் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வானது ஓமந்தை, கனகராயன்குளம், புளியங்குளம் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளிலும் இப் பிரசார நடவடிக்கை வவுனியா மாவட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியினரால் நேற்று முன்தினம் காலை 10 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தியாகராசா, வவுனியா வடக்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் , தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

# எழுக தமிழராய் பேரெழுச்சி



(சென்னை)

**தளராத உறுதியுடன் யாழ்.முற்ற வெளி நோக்கிய எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்று பேரெழுச்சி கொள்க என உங்களுள் ஒருவனாக கேட்டுக்கொள்வதாக தமிழ்த் திரைப் பட நடிகர் புரட்சித் தமிழன் சத்தியராஜ் விடுத்துள்ள காணொலிப் பதிவின் ஊடாக அழைப்பு விடுத்தார்.**

## புரட்சித் தமிழன் சத்தியராஜ் அழைப்பு

அவர் மேலும் கூறுகையில்,

யாழ்.முற்றவெளியில் இன்று திங்கட்கிழமை 16 ஆம் திகதி தமிழினப் படுகொலைக்கு சர்வ தேச அரங்கில் நீதி கேட்டு மிகப் பெரும் எழுச்சிப் பேரணி நடை பெறுகிறது. தமிழ் உறவுகள் இதில் கலந்துகொண்டு தங்களு டைய ஆதரவுக் கரத்தைக் கொடு க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

நடந்த இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிமன் றில் இன்னும் நீதி கிடைக்கவில்லை. அதற்காக நாம் தளர்ந்துவிடாது போராடிக்கொண்டிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட போராட்டமாகவே யாழ். முற்ற வெளியில் தமிழ் மக்கள் பேரவையால் நடத்தப் படும் இவ் எழுக தமிழ் பேரணி தளராத உறுதி யுடன் எழுக தமிழராய் பேரெழுச்சி கொள்ளும் வகையில் ஆதரவுக்கரம் நீட்டுமாறு உங்களுள் ஒருவனாக கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## "வீழாது எங்கள் வீரம் ஓயாது எங்கள் தாகம்"

# அலைகடல் எனத் திரண்டு வாரீர்!

(யாழ்ப்பாணம்)

பண்டை புகழ்கொண்ட ஒரு சுதேச இனம் இன்று தனது இருப் பைத் தக்கவைக்க நித்தம் நித்தம் போராடிக்கொண்டிருக்கின்றது. தமிழர்களாகிய நாம் எமது ஒற் றுமையை உலகிற்கும் ஆட்சியா ளர்களுக்கும் காட்டவேண்டிய கடப்பாட்டிற்குள் இருக்கின் றோம். யுத்தத்தின் வலி, வேத னைகளை இன்னமும் தமது உடல்களிலும் மனங்களிலும் ஆறாத வடுவாய் தமிழர்கள் சும ந்து வருகின்றனர்.

ஒரு தேசிய இனத்தின் உரி மைக் கோரிக்கையை உலகிற் குப் பறைசாற்ற வேண்டியது ஒவ்வொரு தமிழனினதும் தலை யாய கடமை.

எனவே அரசியல், மத, இன பேதங்களை மறந்து எமது உரி மையை நிலைநாட்ட அலை கடல் எனத் திரண்டு வாரீர்! சுதேச மக்கள் கட்சியினராகிய நாம் எழுக தமிழிற்குப் பூரண ஆதரவை வழங்குகின்றோம். எமது இளைஞர்களும் மக்களும் அதனையே விரும்புகின்றனர். எனவே எழுக தமிழ் எமது போரா ட்ட வரலாற்றின் மைல்கல்லாக அமையும். இந்த வரலாற்று பேர ணியில் அனைவரும் தவறாது கலந்துகொள்ளவோம்.

"வீழாது எங்கள் வீரம் ஓயாது எங்கள் தாகம்" என சுதேச மக் கள் கட்சி அழைப்பு விடுத்தது.(இ-7)




# எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு ஈழத்தமிழர் சுயாட்சி கழகம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறும் 'எழுக தமிழ்' எழுச் சிப் பேரணிக்கு ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகமும் தனது ஆத ரவை வழங்குவதோடு மக்க ளும் தங்களது முழு ஆதரவைத் தெரிவிக்கும் முகமாகவும் பேர ணியை வலுவூட்டும் முகமாகவும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அழைப்பு விடுத்தது.

தமிழ் மக்கள் பேரவையின் 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு-கிழக் கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த நிலையில் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகமும் தனது ஆதரவை வழங்குவதாக கட்சியின் செயலாளர் நாயகம் அனந்தி 'சசிதரன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை மாநாடு ஜெனிவாவில் ஆரம்பித் துள்ள இந்த நேரத்தில், தங்க ளுக்கான நீதியைப் பெற்றுத் தருவதில் சர்வதேசத்திற்கும் பாரிய பங்குள்ளது என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துரைக்கும் வகையில் தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.மண்ணில் இன்று திங்கட்கிழமை 'எழுக தமிழ்' எழுச்சிப் பேரணியை தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய் தது.

சிங்கள பௌத்த மயமாக்கல் நிறுத்தப்படல் வேண்டும், சர்வ தேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்படல் வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப் படல் வேண்டும், வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்கள் தொடர் பில் விசாரணை நடத்தப்படல் வேண்டும், வடக்கு-கிழக்கில் இராணுவமயமாக்கல் நிறுத்தப்ப டல் வேண்டும், இடம்பெயர்ந்து அல்லல்படும் மக்கள் அனை வரும் அவர்களது சொந்த நிலங் களில் குடியமர்த்தப்படல் வேண் டும் என்பனவே பிரதான கோரி க்கைகளாகும்.

தமிழர் தாயகமெங்கும் எழுக தமிழுக்கான ஆதரவு பல்வேறு தளங்களில் இருந்தும் வெளிப் படுத்தப்பட்டன.

இந்த நிலையில் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகமும் வடக்கு-கிழ க்கு மக்களிடம் எழுக தமிழுக்கு ஆதரவு தெரிவிக்குமாறு வேண்டு கோள் விடுத்தது. (இ-7)

## மக்கள் புரட்சி வெடிக்கட்டு
## தியாகி திலீபனின் கோரிக்கை

# எழுக தமிழில் ஒன்றிணை

## ஜனநாயகப் போராளிகள் கட்சி

(யாழ்ப்பாணம்)

மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற தியாகி திலீபனின் கோரிக் கைக்கு ஏற்ப எழுக தமிழ் எழுச் சிப் பேரணிக்கு ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆதரவு தெரி விப்பதாக அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாயக மீட்புக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுத முனைப்பு மௌனிக்கப்பட் டதன் பின்னர் மிகவும் கேள் விக்குரியதான இடர்பாடுகள் நிறைந்த 10 ஆண்டுகளை ஈழத் தமிழினம் கடந்து நிற்கிறது.

தமிழருக்கான அரசியல் தீர்வு சம்பந்தமான அடிப்படைகளைக் கூட புரிந்து கொள்ளாத ஓர் வர ட்டு மனோபாவத்தில் சிங்களம்



தனது தேவைகளின் மீதான கரிசனையில் கடந்த 5 தசாப்தங்கள் எப்படிப் பயணித்ததோ அந்தப் போக்கினின்று சற்றும் சளைக்காமல் தீவிரமாகப் பயணிப்பதை தெற்கு அரசியலின் சமகால நிகழ்வுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இடருற்ற எமது மக்களின் வாழ்வியல் போக் கில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட வேண்

# எழுக தமிழ் 2019 எழுச்சிப்பேரணிக்கு ஜனநாயக மக்கள் முன்னணி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கான போராட்டமும் மக்கள் போராட்டமும் தோற்றதா கச் சரித்திரம் இல்லையென ஜனநாயக மக்கள் முன்னணி யின் பிரதித் தலைவரும் ஊடகச் செயலாளருமான சி.பாஸ்கரா தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில், தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற் காக பல தசாப்தகாலமாக பல் வேறு போராட்டங்களை முன் னெடுத்து வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக இன்று திங்கட்கிழமை யாழில் இடம் பெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு எமது கட்சியின் ஆதரவும் தலைவர் அமைச்சர் மனோ கணேசனின் ஆதரவும் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# சிகொள்க!



நீதிமன்
தற்காக
டிருக்க

முற்ற
நடத்தப்
உறுதி
ள்ளும்
களுள்
அவர்
(இ-7)






## எழுக தமிழ்

"அ"னா எழுதிப் படித்த தமிழ்
அம்மா அப்பா சொன்ன தமிழ்
எங்கும் நிறைந்த தமிழ்
இனிய மொழி எங்கள். தமிழ்

ஆத்திசூடி, கொன்றை வேந்தன்
ஔவைப் பிராட்டி சொன்ன தமிழ்
பாப்பாப் பாட்டு பாரதியார்
பாடி வைத்த குழந்தைத் தமிழ்

முதற் தமிழ் மூத்ததமிழ்
முத்தமிழும் கொண்ட தமிழ்
அன்னை தமிழ் அழகு தமிழ்
அறிவுரைகள் தந்த தமிழ்

"எழுக எங்கள் தமிழ்" என்று
இன்பராகம் பாடுவோம்
தமிழுக்கீடு இல்லையென்று
தலை நிமிர்ந்து சொல்லுவோம்

கந்தபேரின்பம்

# ...டும் என்ற ...க்கைக்கு ஏற்ப

# ...ணைவோம்!

## ...கட்சி ஆதரவு



டுமென்ற அவாவுடன் தமிழர் நிலங்களின் மீளமைப்பு மற்றும் மீள்கட்டுமானப் பணிகளின் தேவை கருதியதான அடிப்படை அபிவிருத்தி இலக்குகளை தானும் நாம் எட்டியிருக்கின்றோமா என்ற இயலாமை கலந்த கேள்வி எம்மை ஆட்கொண்டுள்ளது.

காணாமற் போனோர் பற்றிய நம்பகரமான வெளிப்பாடுகளின்றியும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான சாத்தியமான உறுதிப்பாடுகளின்றியும் இடருற்ற மக்களின் வாழ்வாதாரங்கள் பற்றிய கரிசனைகள் ஏதுமன்றியும் போரின் போது விழுப்புண்களை தாங்கிய போராளிகளின் எதிர்காலம் சம்பந்தமான தீர்க்கமானஉறுதிப்பாடுகளின்றி ஈழத் தமிழினம் இடையனற்ற மந்தையைப்போல் வீதிக்கு வந்து நிற்கிறது.

இப்படியான மிகவும் சலனத்திற்குரியதும் இடர்பாடுகள் மிகுந்த திருப்புமுனையில் ஈழத்தமிழினம் பயணிக்குமொரு சூழலில் தமிழ் அரசியற்பரப்பின் வகிபங்காளர்களின் ஏகோபித்த செயற்பாடொன்றின் மூலமே ஈழத் தமிழினம் எதிர் கொண்டுள்ள தற்கால சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என்று ஜனநாயகப் போராளிகள் தீர்க்கமாக நம்புகின்றனர்.

இதனடிப்படையில் குறுகிய கால அரசியல் இலக்குகளுக்கு அப்பால் தமிழர் அபிலாசைகளை மனதிலிருத்தி அனைத்து அரசியல் தரப்புக்களும் ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டிய அவசியத்தை நாம் வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஈழத்தமிழினத்தின் தற்போதைய கோரிக்கைகளுக்கு எழுக தமிழ் பேரெழுச்சியானது ஜனநாயக ரீதியான மக்கள் அரசியற் போராட்டங்களுக்கு வலுச்சேர்ப்பதை உறுதிப்படுத்தவும் தமிழினத்தின் உரிமைகள் சார்ந்து காரியமாற்றும் அனைத்து அரசியற் கட்சிகள், அமைப்புக்கள், தாயக மக்கள் அனைவரையும் " எழுக தமிழ்" பேரணியில் இணைந்து கொள்ளுமாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி அன்புரிமையுடன் அழைப்பு விடுக்கின்றது.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும் திலீபனின் கனவு பலிக்கட்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-9-299)

# எழுக தமிழின் வெற்றிக்கும் அணிதிரட்டலுக்கும் தமிழ் சிவில் சமூக அமையம் தொடர்ந்து ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இன்று இடம்பெறும் "எழுக தமிழ்" எழுச்சிப் பேரணிக்கு தமிழ் சிவில் சமூக அமையம் தனது ஆதரவை வழங்கியது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணி இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடக்குமுறைகள் தொடர்பில் எமது எதிர்ப்பை காட்டுவதற்கும் நீதிக்கான அவாவை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாலும் அரசியலில் வெகுசன அணிதிரட்டலை சாத்தியப்படுத்துவதன் முக்கியத்துவம் கருதியும் நாம் மனப்பூர்வமாக எமது ஆதரவை இம்முயற்சிக்கு அளிக்கின்றோம்.

தேர்தல் அரசியல் தொடர்பிலும் அதில் இயங்கும் தரப்புக்களின் செல்நெறி தொடர்பிலும் தமிழ் மக்கள் மிகவும் சோர்வடைந்து போய் உள்ளனர். மக்கள் பிரதிநிதித்துவ அரசியலை தாண்டிய ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் இயக்கத்தையும் நிகழ்ச்சித்திட்டத்தையும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நோக்கங்களுக்காகவே தமிழ் சிவில் சமூக அமையம் பேரவையின் உருவாக்கத்தில் பங்கெடுத்தது. தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக பரிமாணிப்பதும் தேர்தல் அரசியல் கடந்து அரசியல் பணி ஆற்றுவதுமே அதனது வரலாற்று வகிபாகமாக இருக்க முடியும். அதற்கு பேரவை தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்றும் அத்தகைய முயற்சிக்கு எமது முழு ஆதரவுண்டு என்பதையும் ஆணித்தரமாக வெளிப்படுத்துகின்றோம்.

எழுக தமிழின் வெற்றிக்கும் அதனைத் தாண்டிய அணிதிரட்டலுக்கும் எமது முழுமையான ஆதரவும் தோழமையும் இருக்கும் எனத் தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்கள் கலாநிதி. கு.குருபரன், அருட்பணி. வீ.யோகேஸ்வரன் ஆகியோர் இணைந்து விடுத்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டது. (இ-7)

# தமிழினம் ஒன்றுபடாதவரையில் விடிவு இல்லை;விடுதலை இல்லை

## எழுக தமிழில் ஒன்றுபடுவோம்

(யாழ்ப்பாணம்)

தமிழினம் ஒன்றுபடாவரையில் தமிழர்க்கு விடிவு இல்லை, விடுதலை இல்லை, இதை ஆழ்ந்து சிந்தித்து நாம் அனைவரும் ஒன்றுபடுவோம். தமிழினம் ஒன்றுபட்டுவிட்டது என்பதை உலகறியச் செய்வோம். இதற்குக்கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பம் இன்று 16 ஆம் திகதி நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி.

இந்த எழுக தமிழ் பேரணியில் ஒவ்வொரு தமிழ் மக்களும் கலந்து கொள்வதன் மூலம் தமிழின ஒற்றுமைக்கு வலுச்சேர்ப்போம். தமிழன் அடிமைத்தனத்தில் சுகம் காணுகிறான் எனும் இழிநிலையை மாற்றுவோம். "தனித்துவமானவன் தமிழன், தன்மானமுள்ளவன் தமிழன்" என்பதை உலகறியச் செய்வோம். தமிழன் பண்பட்ட இனம் என்பதை பாருக்கு எடுத்தியம்புவோம்.

"விழிநீர் சொரியான் வெஞ்சமர் புரிவான், களத்தினில் வெல்வான், புறமுதுகு காட்டான் என்பதை புல்லர்க்குணர்த்துவோம். "வீழ்ந்தாலும் தமிழன் வீறு கொண்டெழுவான்" என்பதை வீணர்க்குணர்த்துவோம், கட்சி அரசியல் பேசிக் காலத்தைக் கழிக்காமல் மதவாதம் பேசி தமிழன் மாண்பினைச் சிதைக்காமல் "ஓர் இனம் நாம் ஓர் குலம் நாம்" என ஒன்றுபடுவோம்.

யுத்தத்தின்மூலம் தமிழினத்தை அழிக்கமுடியாத பௌத்த சிங்களப் பேரினவாத அரசு நிர்வாகக் கட்டமைப்புக்களின் மூலம் தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கும் கைங்கரியத்தை மிகவும் கச்சிதமாகச் செய்து வருகின்றது. இதற்கு தமிழினத் தலைவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்களும் துணைபோவதுதான் மிகப் பெரிய வெட்கக் கேடு. மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்ற கட்டமைப்புக்களினால் தமிழனுடைய பாரம்பரிய நிலங்களை அபகரித்து அனுங்காமல் குலுங் காமல் திட்டமிட்ட முறையிலேயே சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். அத்துமீறிய முறையிலேயே விகாரைகளையும் புத்த சிலைகளையும் அமைக்கிறார்கள். நாம் காலம்காலமாக வழிபட்டு வந்த ஆலயங்களை இடித்துப் புத்த கோயில்கள் கட்டுகிறார்கள். யுத்தம் முடிந்த நிலையிலும் இராணுவ முகாம்களை விஸ்தரிக்கிறார்கள்.

வீடு, வாசல்களை இழந்து நன் வளம்மிகு நிலங்களை இழந்து தமிழன் தெருத்தெருவாக அலைகிறான். அவன் நிலத்தை அபகரித்து வீடு வாசல்களை இடித்துத் தரைமட்டமாக்கி அவன் பார்த்துக்கொண்டிருக்க அவன் நிலத்திலேயே சிங்களவரைக் குடியேற்றுகிறது பௌத்த சிங்களப் பேரினவாத அரசு. போதைப்பொருள் பாவனையை எம் இளம் சந்ததியினரிடையே பரவவிட்டு இளைஞர்களின் விடுதலை நோக்கிய இலக்கை திசை மாற்றுகிறார்கள்.

எங்களுடைய கலையை, எங்களுடைய விழுமியங்களை, எங்களுடையபண்பட்ட வாழ்க்கை முறையை, எங்களுடைய தனித்துவத்தை, எங்களுடைய இருப்பைத் தக்கவைக்கவேண்டுமென்றால் நாம் அனைவரும் ஒன்றுபடுவது காலத்தின் தேவை என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதற்குக் களம் அமைத்துக்கொடுக்கிறது தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ். " எழுவோம், தமிழ் மக்களின் உரிமைக்குரலை ஓங்கி ஒலிப்போம்" வாருங்கள் என எமது ஆதரவையும் தெரிவித்து மக்கள் சக்தி உங்களை அன்புக்கரம் நீட்டி அழைக்கிறது என அக்கட்சியின் தலைவர் மு. குமாரவேல் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

# தமிழினமாக எழுக தமிழ் பேரணியில் பேதங்கள் மறந்து பங்கேற்போம்!

## மட்டு. சிவில் சமூகம் அழைப்பு

(ஏறாவூர்)

தமிழ் மக்கள் பேரவையால் இன்று 16 ஆம் திகதி யாழ். மண்ணில் நடத்தப்படும் "எழுக தமிழ்" எழுச்சிப் பேரணியில் தமிழினம் என்ற ரீதியில் எழுக தமிழ் பேரணியில் பேதங்கள் மறந்து பேரெழுச்சியுடன் பங்கேற்க வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகம் அழைப்பு விடுத்தது.

தமிழ்ச் சமூகம் இருப்பவை இழந்து சொல்லொணாத் துயரை அனுபவித்தபடி இருக்கும் இத்தருணத்திலே யாழ்.மண்ணில் "எழுக தமிழ்-2019" பேரணி நடக்கிறது. எல்லாத் தமிழர்களும் தமிழினம் என்ற ரீதியிலே நாங்கள் ஒற்றுமையுணர்வுடன் பங்குபற்றவேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற துன்பகர மற்றும் தீர்க்கப்படவேண்டிய வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்வைத்து நடத்தப்படும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியிலே தமிழன் என்ற சொல்லிற்கு அர்த்தம் கொடுக்க நினைக்கும் ஒவ்வொரு தமிழனும் பங்கேற்க வேண்டும்.

எங்களது வருங்காலச் சந்ததியின் இருப்பை உறுதிப்படுத்த இப்பேரணியில் பங்குபற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (இ-7)

# போதைப்பொருளுடன் தொடர்புடைய எந்தநபரும் பாதுகாக்கப்படக்கூடாது

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு

**(கொழும்பு) போதைப்பொருளுடன் தொடர்புடைய எந்தவொரு நபரும் பாதுகாக்கப்படக் கூடாது எனப் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

சாலியவெவ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



போதைப்பொருள் கடத்தல் காரர்களுடன் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியாது எனவும் போதைப்பொருள் கடத்தல் காரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தமைக்காக தன் மீது குற்றம் சுமத்தப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-2)

# பேருந்து கவிழ்ந்து விபத்து

## 20 பேர் படுகாயம்




(முந்தலம்)

முந்தலம், செம்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பேருந்து விபத்தில் 20 பேர் காயமடைந்தனர்.

கம்பஹாவில் இருந்து தலவில தேவாலயத்திற்கு யாத்திரை சென்ற பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

குறித்த பேருந்தில் கம்பஹா, வெலிவேரிய, திவுலபிடிய, மினுவாங்கொட, நாத்தாண்டிய மற்றும் வலகபிடிய பகுதியைச் சேர்ந்தவர்கள் பயணித்தனர்.

குறித்த பேருந்து நேற்று முன்தினம் கம்பஹாவில் இருந்து தலவில நோக்கி வந்ததாகவும் மீண்டும் கம்பஹா நோக்கி பயணிக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றது. குறித்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் பிரதேச வாசிகளின் உதவியுடன் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் முந்தலம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)

# மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையின் மைதானத்தில் மாணவர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர். இதனால், அங்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை பெரும் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

மட்டக்களப்பு சிவானந்தா தேசிய விளையாட்டு மைதானத்தில் திருகோணமலை இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலைக்கும் இடையில் வருடாந்தம் நடைபெறும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியின் போது, மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை மாணவர்கள் வெற்றிபெற்ற நிலையில், அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் மாணவர்கள் மோட்டார் சைக்கிளில் ஊர்வலமாக செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேநேரம், திருகோணமலை மாணவர்கள் சிலர் நேற்று முன்தினம் கல்லடிப் பகுதியில் வைத்து தாக்கப்பட்டதாகவும், கிரிக்கெட் போட்டியின் போதும் திருகோணமலை மாணவர்கள் சிலருக்கும் சிவானந்தா மாணவர்கள் சிலருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்ட நிலையிலேயே, மைதானத்திற்குள் நுழைந்த பொலிஸார் மைதானக் கதவுகளை அடைத்துவிட்டு மாணவர்களைத் தாக்கினர். அத்தோடு, மூன்று மாணவர்களை கைது செய்தனர். (ஜ-2)

# இந்தியா-இலங். கடற்படைகளின் கூட்டுப்பயிற்சி நிறைவு



(விசாகப்பட்டினம்)

இந்திய - இலங்கை கடற்படைகளுக்கு இடையில் விசாகப்பட்டினத்தில் நடந்து வந்த **SLINEX 2019** கூட்டுப் பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது.

இந்த இருதரப்பு கூட்டுப் பயிற்சி கடந்த 7 ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் உள்ள இந்திய கடற்படைத் தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் இலங்கை கடற்படையின் சார்பில், சிந்துரால, சுரனிமல ஆகிய போர்க்கப்பல்கள், சுமார் 300 வரையான கடற்படையினருடன் பங்கேற்றிருந்தன.

2005ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய - இலங்கை கடற்படைகள் **SLINEX** என்ற பெயரில் கூட்டுப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன.

இந்த ஆண்டு ஏழாவது முறையாக இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புகைப்பழக்கம்

சிகரெட் பிடிக்கும் பழக்கம் இல்லாத ஒரு ஊருக்கு ஒரு சிகரெட் வியாபாரி வந்தார். வியாபாரம் செய்து பார்த்தார். யாரும் அந்த ஊரில் வாங்கும் வழியைக் காணோம்.

இவர் என்ன செய்யலாம் என்று யோசித்தார். உடனே பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். சிகரெட்டினுடைய பெருமைகளைப் பற்றி! எப்படித் தெரியுமா? புகைப் பிடிக்கிறவன் எவனையும் நாய் கடிப்பதில்லை, புகைப்பிடிப்பவனுக்குப் பெண் குழந்தை பிறப்பதில்லை, புகைப்பிடிப்பவன் வீட்டுக்குத் திருடன் வரமாட்டான், புகைப்பிடிப்பவனை முதுமை நெருங்காது என்று சொல்லி விளம்பரம் செய்ய ஆரம்பித்தான்.

மக்கள் எல்லாம் பார்த்தார்கள். இதிலே நிறைய சௌகரியம் இருக்கும் போல இருக்கு என்று நினைத்தார்கள். உடனே சிகரெட் வாங்க ஆரம்பித்தார்கள். வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டது. ஒரு வருடம் ஆகிவிட்டது.

புகையிலையின் மகிமை பற்றி அந்த வியாபாரி சொன்னது பொய் என்று அனுபவத்திலே புரிந்து கொண்டார் ஒருத்தர். உடனே வியாபாரியைத் தேடிக்கொண்டு போனார். "என்னையா நீ... இந்த ஊர் மக்களை பொய் சொல்லி ஏமாற்றி விட்டியே!" என்று கத்தினார். ஆனால் அந்த ஆள் கொஞ்சம் கூட அசரவேயில்லை

நான் சொன்னது எதுவும் பொய் இல்லை என்று சாதித்தார். இவர் விடவில்லை! "அது எப்படி? புகைப்பிடிப்பவனை நாய் கடிக்காது என்று சொன்னியே அது பொய்தானே!" என்றார். இதற்கு அந்த வியாபாரி விளக்கம் கொடுத்தார். "அப்படி இல்லை... புகைப்பிடிப்பவன் உடம்பில் பலம் இருக்காது. தள்ளாடி தள்ளாடித்தான் நடப்பான். அதனால் எப்பவும் கையில் ஒரு ஊன்றுகோல் வைத்திருப்பான். கையில் குச்சியுடன் இருப்பவனைக் கண்டால் நாய் நெருங்காது! அதுதான் அப்படிச் சொன்னேன்!" என்றார்.

"பெண் குழந்தை பிறக்காது என்று சொன்னியே அது எப்படி?" என்று கேட்டார். "உண்மையில் அவனுக்கு எந்தக் குழந்தையும் பிறக்காது. அதனால் பெண் குழந்தையும் பிறக்காது என்பது உண்மைதானே!" என்றார். "புகைப்பிடிப்பவன் வீட்டுக்குத் திருடன் வரமாட்டான்! என்று சொன்னியே!" என்றார். "ஆமாம்! புகைப்பிடிப்பவன் இரவு முழுவதும் இருமிக்கொண்டே இருப்பான். அதனால் ஆள் முழித்துக்கொண்டிருக்கிறான் என்று நினைத்து திருடன் வரமாட்டான்!" என்றார்.

"எல்லாம் சரி! புகைப்பிடிப்பவன் முதுமை அடைவதில்லை! என்று சொன்னியே! அது எப்படி சாத்தியம்?" என்று கேட்டார். "முதுமை வருவதற்கு முன்பே அவன் இறந்துவிடுவான் சேர்! பின்பு எப்படி அவனை முதுமை நெருங்கும்? என்று கேட்டார். நியாயம்தான் என்று சொல்லிவிட்டு இவர் திரும்பி வந்துவிட்டார். இந்தக் கதையிலிருந்து வியாபாரத் தந்திரம் என்றால் என்ன என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது! புகைப்பழக்கம் எவ்வளவு கெடுதல் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது!

சிகரெட் பிடிப்பவர்கள் எந்த நேரமும் அதை நிறுத்தாமல் 70 வயது ஆன ஒருவர்... அதுவரைக்கும் சிகரெட் குடித்துக் கொண்டிருந்தவர்... அந்த வயதில் அதை கைவிட்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்... அவர் அதிக நாள் வாழ்வாராம். இவ்வளவு காலம் குடித்துவிட்டோம்... இனிமேல் நிறுத்தி என்ன பிரயோசனம்?" என்று நினைக்க வேண்டியதில்லை. அமெரிக்காவில் இதைப்பற்றி சோதனையெல்லாம் செய்து பார்த்திருக்கிறார்கள்.

"ஏற்கனவே பிடித்த சிகரெட் வயதான காலத்தில் கெடுதல் செய்யும்" என்று நினைக்க வேண்டியதில்லை... எந்த நேரமும் அதைக் கைவிடலாம்! எந்த நேரம் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டாலும் அதற்குப்பின்னர் நல்லபடியாக வாழலாம்! இதுதான் நிபுணர்கள் கருத்து!

இவ்வளவு எல்லாம் சொல்லியும் யார் சேர் கேட்கிறார்கள் இந்த காலத்திலே? அன்றைக்கு பாருங்கள்... அப்படித்தான் ஒரு சின்னப்பையன் கடைக்கு வந்தான். "இரண்டு சிகரெட் கொடுங்கள் சேர்" என்றான். இவ்வளவு சின்னப் பையனாக இருக்கிறாய்.. சிகரெட் கேக்கிறியே! இந்த வயசிலேயே உனக்கு அந்தப் பழக்கம் வரலாமா? என்று கேட்டார் கடைக்காரர். "எனக்கு எல்லாம் அந்தப் பழக்கம் கிடையாது சேர்!" என்றான்.

"அப்போ இது யாருக்கு!" என்று கேட்டார் அவர். "என் தம்பிக்கு சேர்!" என்றான் அந்தப் பையன்.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2019-17.10.2019

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சுக்கிரன் நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். சுபச்செலவுகள் அதிகரிக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து குடும்ப உறுப்பினர்களை திருப்தி செய்வீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். அதே நேரத்தில் நீச்சம் பெற்ற சுக்கிரன் உச்சம் பெற்ற புதனுடன் இணைந்து நீச்சபங்க ராஜயோகத்தை உருவாக்குகிறார். எனவே செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.

உங்கள் இராசிக்கு 2, 7இற்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் தற்சமயம் 11ஆம் இடத்தில் இருக்கிறார். அது லாபஸ்தானம் என்பதால், உதிரி வருமானம் வருவதற்கான வாய்ப்பு உண்டு. 'படித்து முடித்து இதுநாள்வரை பணி கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு நல்ல சம்பளத்தில் வேலை வாய்ப்பு அமையும். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும்.

இருப்பினும் இம்மாதம் கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போவதால் திடீர் விரயங்களும் வந்து கொண்டேயிருக்கும். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது அல்லது வாங்கிய கடனில் ஒருபகுதியை திருப்பிக்கொடுப்பது. ஆடை, ஆபரணங்களை வாங்குவது போன்ற சுபச் செலவுகளில் கவனம் செலுத்தலாம்.

9ஆம் இடத்தில் ராகு இருப்பதால் பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சொத்துப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள். வெளிநாட்டு அழைப்பு வந்து அலைமோதும். சுய ஜாதக அடிப்படையில் அவற்றை ஏற்றுக் கொள்ளலாமா? என்று சிந்தித்து முடிவெடுங்கள்.

இம்மாதம் மகாளய அமாவாசை வருகிறது. அன்றைய தினம் முன்னோர்களை வழிபடுவது நல்லது. அப்பொழுது தான் முன்னேற்றப் பாதையை நோக்கி நீங்கள் செல்ல முடியும். இம்மாதம் நவராத்திரி விழாவும் வருகிறது. அந்த ஒன்பது நாட்களும் அம்மனை வழிபட்டு நல்லவாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 12ஆம் இடமான கன்னி இராசியில் புதன் உச்சம் பெற்று சஞ்சரித்து வந்தார். செப்டெம்பர் 25ஆம் திகதி அவர், உங்கள் இராசிக்குள் அடியெடுத்து வைக்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். ஆகவே பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் மறையும். உறவினர்கள் உறுதுணையாக இருப்பர். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரப் பயணங்கள் உருவாகலாம். பங்காளிப் பகை மாறும்.

### கன்னி செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானத்தில் இருந்து வந்த செவ்வாய், செப்டெம்பர் 26 ஆம் திகதி விரய ஸ்தானத்திற்கு வருகிறார். தன சப்தமாதிபதியாக விளங்கும் செவ்வாய், விரய ஸ்தானத்திற்கு வரும் பொழுது சில இடையூறுகள் வரலாம். குறிப்பாக வாங்கிய சொத்தை விற்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம். சகோதர பாசம் குறையும். உடன்பிறப்புகளில் ஒருசிலர் உங்களை விட்டு விலகுவர். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் ஏற்படும். உத்தியோக மாற்றம் பற்றி சிந்தித்தவர்களுக்கு, அது




தானாகவே கைகூடும். அதேவேளையில் இடமாற்றம் பெற்றுச் செல்லும் இடம் திருப்தி தருமா என்பது சந்தேகம்தான்.

### துலாம் சுக்கிரனின் சஞ்சாரம்

ஒக்டோபர் 5ஆம் திகதி துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் இராசிக்கே வரும் நேரம் இது. எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும்.

உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும். சச்சரவு செய்த சகோதரர்கள் சமாதானம் அடைவர். ஆபரணங்கள் வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு.

வெளிநாட்டு முயற்சிகள் கைகூடலாம். ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் செய்பவர்களுக்கு ஏற்றமான காலகட்டம் இது. இக்காலத்தில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் செல்வச் செழிப்பில் மிதப்பீர்கள்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் நிம்மதியை குலைத்த குடும்பப் பிரச்சினைகள் தீரும். கருத்து வேறுபாடுகள் அகலும். தம்பதியர்களுக்குள் ஒற்றுமை பலப்படும். உத்தியோகம் சம்பந்தமாகப் பிரிந்திருந்த தம்பதியர்கள் ஒன்று சேருவர். செல்வநிலை சிறப்பாக உள்ளது. தாய் மற்றும் சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மனஅழுத்தம் அகலும்.

மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் சுக்கிர பெயர்ச்சிக்குப் பிறகு உங்களுக்குக் கிடைக்கும். பிள்ளைகள் படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். முட்டுக்கட்டைகள் அகன்று முன்னேற்றம் அதிகரிக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.

பணிபுரியும் பெண்கள் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வியாழன் தோறும் குருவை வழிபட்டால் நன்மைகள் நாடி வரும்.

## செலவிற்கேற்ற வரவு வந்து சேரும்



விகாரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய், தொழில் ஸ்தானத்தில் இருக்கிறார். இலாபாதிபதி புதன் உச்சம் பெற்று இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே குரு பகவான் வீற்றிருக்கிறார். எனவே உங்கள் எண்ணங்கள் எல்லாம் எளிதில் நிறைவேறும் மாதமாக இந்தமாதம் அமையப் போகிறது. தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் பிறக்கும். உற்றார், உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள், தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் வருமானம் கிடைக்கும்.

குரு பகவான், உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். தன பஞ்சமாதிபதியாக விளங்கும் குரு, ஜென்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தாலும் அதற்குரிய தொகை உங்கள் கைகளில் புரளும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் நேரமிது. கொடுக்கல்-வாங்கலில் திருப்தி ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவீர்கள். பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உகந்த நேரம் இது. புத்திர ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால் மேற்படிப்பு படிக்க நினைக்கும் உங்களின் பிள்ளைகளுக்கு படிப்பைத் தொடர வழிவகுத்துக் கொடுப்பீர்கள். திருமண வயதில் உள்ள பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு, கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்களும் புத-சுக்கிர யோகம், புத- ஆதித்ய யோகம் போன்ற யோகங்களை உருவாக்கும் விதத்தில் இருப்பதால், எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் நேரமிது.

இம்மாதம் மகாளய அமாவாசை வருவதால் அன்றைய தினம் முன்னோர்களை வழிபட்டு வருவதன் மூலம் முன்னேற்றப்பாதையில் உள்ள இடையூறுகள் அகலும். மேலும் நவராத்திரி நாட்களில் விரதமிருந்து மலைமகள், கலைமகள், அலைமகள் ஆகியோரை வழிபட்டு அற்புதமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

### பொன்னான புதனின் பெயர்ச்சி

செப்டெம்பர் 25ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். அஷ்டமாதிபதியாக விளங்கும் புதன் 12ஆம் இடமான துலாம் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத ராஜயோகம் செயற்படப் போகிறது. எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றிகிடைக்கும். திறமைமிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து ஒத்துழைப்பு வழங்குவர். கடமையில் இருந்த தொய்வு அகலும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்துசேரும். வீடு கட்டும் யோகம் அல்லது வாங்கும் யோகம் உண்டு. விலை யுயர்ந்த பொருட்களையும் வாங்குவீர்கள்.

### இலாபச் செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். அந்த நிகழ்வு செப்டெம்பர் 26ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது, வங்கிச் சேமிப்பு உயரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். பூமிகாரகன் செவ்வாய் என்பதால் பூமி வாங்கும் யோகம் உண்டு.




ஒருசிலர் பல வருடங்களுக்கு முன்பு வாங்கிப் போட்ட இடத்தை இப்பொழுது நல்ல விலைக்கு விற்று இலாபம் பார்ப்பார்கள். மேலும் அந்தத் தொகையைத் தொழிலுக்கான மூலதனமாக மாற்றி தொழிலை விரிவு செய்ய ஏற்பாடு செய்வீர்கள். புதிய பங்குதாரர்கள் தானாக வந்திணைவர். பிறருக்குக் கடனாக கொடுத்த தொகை கைக்கு வந்துசேரும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம்.

### சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஒக்டோபர் 5 ஆம் திகதி துலாம் இராசிக்குச் செல்லப் போகிறார். 12இற்கு அதிபதியான சுக்கிரன் 12 ஆம் இடத்திற்கு வரும்பொழுது பயணங்கள் அதிகரிக்கும். அது வேலை நிமித்தமாகவும் இருக்கலாம் வேண்டிய நண்பர்களுக்காகவும் இருக்கலாம். பொதுவாக விரய ஸ்தானம் பலம் பெறும் இந்த நேரத்தில், சுபவிரயங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்வீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு சாதகமாக நடந்து கொள்வர். இம்மாதம் முன்னோர் வழிபாட்டையும், விநாயகப் பெருமானையும் வழிபட்டு வாருங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்


இம்மாதம் மதிப்பும், மரியாதையும் உயரும். இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆடை, அணிகலன்கள் வாங்கும் யோகம் உண்டு. சொத்துக்கள் கூட உங்கள் பெயரில் வாங்கலாம் என்று குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். தம்பதியர்களுக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயற்பட்டு மற்றவர்களுக்கு முன் உதாரணமாக விளங்குவீர்கள். படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்து, அதன் மூலம் உதிரி வருமானங்கள் வரலாம். கொடுத்த வாக்கைக் குறிப்பிட்டபடி காப்பாற்றுவீர்கள். உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். பணிபுரியும் உங்களுக்குள் பளிச்சிடும் திறமையைக் கண்டு சம்பள உயர்வு கிடைக்கும். அதுமட்டுமல்லாமல் வாகனம் வாங்க வேண்டுமென்று விரும்பினால், அதற்குரிய சலுகைகளும் கிடைக்கும். செவ்வாய்க்கிழமை தோறும் ஆதிபராசக்தியை வழிபட்டு நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

## தொழில் வளர்ச்சி கூடும் நேரமிது

(தொடரும்)

# சவுதி அரேபிய அரசின் பெற்றோல் உற்பத்தி ஆலை மீது ஆளில்லா விமானம் தாக்குதல்!

## ஏமன் ஏவியிருக்கலாம் என சந்தேகம்



(ரியாத்)

**சவுதி அரேபியாவின் அரம்கோ பெற்றோல் உற்பத்தி நிறுவனத்தின் சுத்திகரிப்பு தொழிற்சாலை மீது ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் பாரிய சேதம் ஏற்பட்டது.**

சவுதி அரசின் அரம்கோ பெற்றோல் உற்பத்தி நிறுவனத்துக்கு சொந்தமாக நாடு முழுவதும் பல்வேறு சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், தலைநகர் றியாத்தில் இருந்து சுமார் 330 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புக்யாக் என்ற இடத்தில் அப்கைக் என்னும் சுத்திகரிப்பு ஆலையின் மீது நேற்று முன்தினம் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது.

நாளொன்றுக்கு சுமார் 70 இலட்சம் பெற்றோலிய கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் அந்தத் தொழிற்சாலையின் பெரும் பகுதி தீயில் எரிந்து சேதமடைந்தது.

இதேபோல், குர்அய்ஸ் என்ற பகுதியில் உள்ள அரம்கோ நிறுவனத்தின் பெற்றோல் கிணறு மீதும் ஆளில்லா விமானம் மூலம் நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பெற்றோல் கிணற்றின் ஒருபகுதி தீப்பிடித்து எரிந்து, பின்னர் அணைக்கப்பட்டதாக சவுதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தத் தாக்குதலுக்கு யாரும் பொறுப்பேற்காத நிலையில் அயல் நாடாக இருந்து பகை நாடாக மாறிய ஏமன் தரப்பில் இருந்து ஆளில்லா விமானங்கள் ஏவப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## பதாகை சரிந்து வீழ்ந்து யுவதி பலி



(சென்னை)

இந்தியாவில் சென்னையில் பதாகை வீழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் 23 வயது இளம்பெண் உயிரிழந்தார்.

பதாகை வைப்பதற்கு சென்னை மாநகராட்சி கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ள நிலையில், இந்த விபத்து இடம்பெற்றமை பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னை குரோம்பேட்டை - பவானி நகர் பகுதியைச் சேர்ந்த பெற்றோருக்கு ஒரே மகளான சுபஸ்ரீ என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் சென்னையில் உள்ள பள்ளிக்கரணை வீதியில் தனது இரண்டு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்தை எதிர்கொண்டுள்ளார்.

பள்ளிக்கரணையின் முன்னாள் நகர மன்ற உறுப்பினரான ஜெயகோபால் என்பவரின் மகனின் திருமண வரவேற்பு நிகழ்விற்காக வீதியெங்கும் வைக்கப்பட்டிருந்த பதாகைகளில் ஒன்று சுபஸ்ரீ மீது சரிந்து வீழ்ந்து விபத்து இடம் பெற்றது.

பதாகை வீழ்ந்ததில் நிலை தடுமாறி கீழே வீழ்ந்த சுபஸ்ரீயின் வாகனத்தின் மீது தண்ணீர் ஏற்றிச்சென்ற லொறி மோதியுள்ளது.

சுபஸ்ரீ லொறியின் சக்கரத்திற்குள் சிக்கி படுகாயமடைந்த நிலையில், வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதே உயிரிழந்தார்.(ஜ)

## ஆப்கான் படைகளிடம் 41தலிபான்கள் சரணடைவு

(காபூல்)

வார்சாஜ் மாவட்டத்தில் 41 தலிபான் பயங்கரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, ஆப்கானிஸ்தான் படைகளிடம் சரணடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து 19ஆவது ஆண்டாக தலிபான் பயங்கரவாதிகள், உள்நாட்டு படைகளுடன் போரிட்டு வருகின்றனர்.

இந்தப் போரினால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

இதற்கிடையே இன்னொரு பக்கம், தலிபான் பயங்கரவாதிகள் ஆயுதங்களை கைவிடவும், அரசுக்கு எதிரான போர்க் குணத்தை கைவிடவும், 2010ஆம் ஆண்டு சமாதானம், நல்லிணக்க செயல்முறையை ஆப்கானிஸ்தான் அரசு தொடங்கியது.

அதன்பின்னர் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலிபான் பயங்கரவாதிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு நல்லிணக்க செயல்முறையில் இணைந்தனர்.

இந் நிலையில், டாக்கார் மாகாணத்தின், வார்சாஜ் மாவட்டத்தில் நேற்று 41 தலிபான் பயங்கரவாதிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு, ஆப்கானிஸ்தான் படைகளிடம் சரணடைந்தனர்.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் இராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "உள்ளூர் பெரியவர்கள் மற்றும் பொலிஸ் படையினர் எடுத்த முயற்சியின் பலனாக 41 தலிபான் உறுப்பினர்கள் ஆப்கான் தேசிய மற்றும் பாதுகாப்புப் படைகளிடம் வார்சாஜ் மாவட்டத்தில் சரண் அடைந்துள்ளனர்" எனக் கூறப்பட்டுள்ளது. (ஜ)

## காஷ்மீர் குழந்தைகள் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல உதவவேண்டும்

### ஐ.நாவிடம் மலாலா வேண்டுகோள்





(லண்டன்)

காஷ்மீரில் குழந்தைகள் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல ஐ.நா.சபை உதவ வேண்டும் என பாகிஸ்தான் ஆர்வலரும், நோபல் பரிசு பெற்றவருமான மலாலா நேற்று உருக்கமான பதிவொன்றை வெளியிட்டார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் லடாக் மற்றும் காஷ்மீர் என இரு யூனியன் பிரதேசமாக பிரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்பும், ஆதரவும் தொடர்ந்து எழுந்து வருகிறது.

காஷ்மீருக்கு வழங்கி வந்த சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டபோது பாதுகாப்பு காரணங்களுக்காக சில பகுதிகளில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. நிலைமை சற்று சீரடைந்ததை தொடர்ந்து பாடசாலைகள் திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே, காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தின் பாலக்கோட் பகுதிக்கு உட்பட்ட சன்டோட்டே கிராமத்தில் உள்ள பாடசாலையில் குழந்தைகள் பாடம் பயின்று கொண்டிருந்தனர். அப்போது பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லைகளை குறிவைத்து அத்துமீறி துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதனால் குழந்தைகள் அனைவரும் பயத்தில் செய்வதறியாது திகைத்தனர்.

அப்பகுதிக்கு விரைந்த இந்திய இராணுவத்தினர் சிக்கித் தவித்த குழந்தைகளை பாதுகாப்பாக மீட்டனர். இதுதொடர்பான காணொலி சமூக வலைத் தளங்களில் வைரலாகியது.

இந்நிலையில், காஷ்மீரில் குழந்தைகள் மீண்டும் பள்ளிக்கு செல்ல ஐ.நா.சபை உதவ வேண்டும் என பாகிஸ்தான் ஆர்வலரும், நோபல் பரிசு பெற்றவருமான மலாலா நேற்று உருக்கமான பதிவொன்றை வெளியிட்டார்.(ஜ)

## அமேசன் காடுகளைப் பாதுகாக்க அமெரிக்கா-பிரேசில் கூட்டு முயற்சி

(பிரேசில்)

அமேசன் மழைக்காடுகளைப் பாதுகாக்கும் வகையில் அமேசனில் தனியார் துறையை ஊக்குவிப்பதற்கு பிரேஸிலும் அமெரிக்காவும் இணங்கியுள்ளன.

இதற்கமைய, அமேசனின் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாப்பதற்காக தனியார் துறை ஊடாக 100 மில்லியன் டொலர்களை ஒதுக்கீடு செய்ய அமெரிக்கா - பிரேஸிலுக்கு இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இரு நாடுகளின் அதிகாரிகளுக்கு இடையில் வோஷிங்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

பொருளாதார வளர்ச்சிக்காக மழைக் காடுகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதே, அதனைப் பாதுகாப்பதற்கான ஒரே வழியாகும் என பிரேஸில் வெளிவிவகார அமைச்சர் எரன்ஸ்டோ அருவ்ஜோ தெரிவித்தார்.

இந்த ஆண்டில் மட்டும், அமேசன் மழைக்காடுகளில் 80 ஆயிரத்துக்கும் அதிகமான தீப்பரவல் ஏற்பட்டு பெருமளவான காடுகள் அழிவடைந்ததோடு பல்வேறு உயிரினங்களும் அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# தேசியப்புலவனாய்ச் சிந்தையில் நிலைப்பவன்

# வட்டுக்கோட்டை சிந்துபுரம் தந்த முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி



''இலங்கைத் திருநாட்டின் தலைநகரில் சிறந்த ஆங்கிலக் கல்லூரி ஒன்றில் தலைமைத் தமிழாசானாய் வீற்றிருந்த அவர் அரசறிய வீற்றிருக்கும் வாழ்வும் பெற்றவர். இந்தத் தலைமை வெறும் தமிழறிவால் மாத்திரம் வந்ததன்று. தமிழின் விழுமியங்களை உணர்ந்து வாழ்வும் வாக்கும் ஒன்றானதால் வந்தது.

அவரது முதுதமிழ்ப்புலமைக்கு அரசு மதித்த மரதன், அஞ்சலோட்டக் கவிதைகள் சான்றாகும்'' என்பது கலாநிதி வித்துவான் க.ந.வேலனின் கூற்றாகும்.

"செந்தமிழ் தாயின் சிறுமை தீர்க்க
வந்து தோன்றிய நந்தா விளக்காம்
கன்னித் தண்டமிழ் முந்நீர்த் துறைதோறு
பன்னூல் அமுதம் உண்டு நன்னூற்
தூக்கு முறையும் ஆக்கிடு கலைமுகில்..." என்பது நவாலியூர் தங்கத் தாத்தா புலவரேறு சோமசுந்தரப் புலவர் வாக்காகும்.

**"ஆற்றை நாள் புலவரெலாம்**
**அமிழ்ந்தொழிந்து தகன்று போகப்**
**பிற்றை நாளுதித்தே யீழம் பெருமித மடைய நின்றாய்**
**இற்றைநாள் நீயு மல்வா(று) இறந்து பட்டொழிந்த தாலே**
**உற்றன மீண்டும் சோகம் உழுவலன் பின்னோம் ஐயோ"**

என்றுரைத்தார் பண்டிதர் ஜே.எஸ்.ஆழ்வாப்பிள்ளை.

"முதுதமிழ்புலவரை நாடறியும் பல சிறந்த நூல்களின் ஆசான் எனது பார்வையில் இரு நூல்களின் மணிமகுடம் மணித்தாயும் மரதனஞ்சல் ஓட்டமும் இதனுள் இலங்கையின் பண்டைய பெருமைகளைச் சிறந்த செய்யுள்களிலே வடித்தெடுத்துள்ளார். அவருக்கு ஐக்கிய இலங்கையில் மிகுந்த நம்பிக்கை இருந்தது. இலங்கைத் தமிழரைப் பற்றிய கனவு விரைவில் நனவாகலாம்" என்பது பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளையின் கருத்தாகும்.

இவ்வாறெல்லாம் பலரும் வியந்துரைத்ததை நாமெல்லாம் எண்ணிப்பார்க்கிறோம். தேசியப்புலவனாய் நம்நாட்டில் வலம்வந்தவர் தேசிய கீதத்தைத் தமிழில் தந்தவர் நம்புலவர். அவரின் பாடல்களும் பிறவும் தமிழின் ஊற்றாகும்.

"செழுமையின் மிக்கனை பழமையிற் சிறந்தனை சீர்மிக நிறைந்தனை பேர்மிகப் படைத்தனை மானமும் வீரமும் வயங்கிய மன்னராற் புரக்கப் பெற்றனை புலநெறி வகுத்தனை..." எனத்தாய் நாட்டின் பெருமையைக் கூறும் மரதனஞ்சலோட்டத்தில் புறநானூற்றுத் தமிழின் ஓட்டத்தைக் காணலாம்.

**முந்திய தமிழினை முறையாய்க் கற்றுநல்**
**முதுதமிழ்ப் புலவ னானவன் - கவிதையால்**
**முதுதமிழ்ப் புலவ னானவன்**
**சந்தம் மிகுந்திடு சிந்தெனப் படைத்தனன்**
**சார லருவிகள் போலவே கவிதைகள்**
**சார லருவிகள் போலவே**
**சந்ததி தழைத்திடத் தந்தநற் பயிற்சிகள்**
**சாற்றிய நற்கதைக் கவிதைகள் - தமிழால்**
**சாற்றிய நற்கதைக் கவிதைகள்**
**முந்திய மக்களும் முறையாய்ச் செழித்தனர்**
**முற்பட்டெழுதிய நூல்களால் - இவர்தான்**
**முற்பட்டெழுதிய நூல்களால்**
**என்றெல்லாம் நாமும் பாராட்ட முடியுமன்றோ!**

இவர் புகழுடம்பை விட்டுச் சென்ற பின்னர் இளைஞர் மன்றத்தாரால் தொகுக்கப் பெற்ற ''இளைஞர் விருந்து'' என்னும் நூல் இவரது கவிதைகளை வெளிக்கொணர்ந்தமை பாராட்டிற்குரியது.

இவர் இம்மண்ணில் வாழ்ந்த காலம் மிகக்குறுகியது. (1896.09.13-1951.05.08) 55 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்திருந்தாலும் ஈழத்துத் தமிழ்ப் புலவர்களிலே தனக்கெனத் தனியான ஓரிடத்தைப் பெற்று மிளிர்ந்தார்,மிளிர்கின்றார்.

இவரது பெற்றோர் முருகுப்பிள்ளை தங்கம்மை. இவரது மரபுக்கல்விக்கு ஊட்டமும் உயிர்ப்பும் கொடுத்தவர் தென்கோவைப் பண்டிதர் வித்தகம் ச.கந்தையாபிள்ளை. இளமையிலே இவரது கவியாற்றலும் நாடகத் திறமையும் பேச்சாற்றலும் சிறந்து விளங்கியதையும் அவர் காலத்தோர் சொல்லியுள்ளனர். இவரது ஆற்றலைப் பாராட்டித் தமிழ்நாட்டுத் திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தார் முதுதமிழ்ப் புலவர் என்று விருதளித்துக் கௌரவித்தனர். அதற்குக் காரணம் தமிழ் நாட்டறிஞர் பலர் இவரது திறமையை மெச்சியதாலேயாம். பேரறிஞர் மணி திருநாவுக்கரசு, ரா.பி.சேதுப்பிள்ளை, கல்கி போன்றோரும் தென்னிந்திய ஆதீனத்தினரும் இவர்பால் அன்பு பாராட்டிவந்தனர். மணி திருநாவுக்கரசரிடம் இவர் காட்டிய அன்பு காரணமாக தம் மூத்த புதல்வருக்கு மணி திருநாவுக்கரசு எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.


சுவாமி விபுலானந்தர் இவரைப்பற்றிக் குறிப்பிடுகையில்... "மனக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப் பாவல, என விளித்து, பாவலன் என்ற அழியாச் செய்யுளால் நற்சான்று பகர்ந்து விட்டேன். நீங்கள் எந்நாளும் தமிழ்த்தொண்டு புரியவேண்டும். தமிழ்ப் புலவராகிய நாம் கம்பனின் வழித்தோன்றல்கள். நாமும் மன்னனின் முன்னிலையில் இறுமாப்புடன் நிற்கவேண்டும்... நூலாராய்வதிலும் நூல் எழுதுவதிலும் பொழுது போக்கும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கின்றேன்" என்று கடிதம் எழுதினார். அக்கடிதம் வீரகேசரியில் முழுமையாக வெளிவந்திருந்தது.

கொழும்பு சாகிராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தகாலம் இவரது பொற்காலமாகும். ஜெனாட், எஸ்.எம்.கமால்தீன் போன்ற தமிழறிஞர்களுக்கெல்லாம் தமிழறிவுறுத்தியவர். பேராதனை, கொழும்பு ஆகிய இடங்களின் பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றிய இவர், ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்க பரீட்சகராகவும் அரச பாடநூற்சபையில் அங்கம் வகித்தவராகவும் விளங்கியவர்.

வித்தியா சமய சாரப்பத் திரிகை (The Education Gazette) ஈழகேசரி, வித்தகம் ஆகியவற்றிலும் தென்னிந்திய இதழ்களிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. வாழ்க இவர் நாமம்.

**புலவர், பண்டிதர்.ம.ந.கடம்பேசுவரன்.**

## தந்தை, சகோதரனை விடுவிக்குமாறு கஞ்சிபான சிறையில் உண்ணாவிரதம்



(கொழும்பு)

பாதாள உலகக் குழுவின் முக்கியஸ்தர் கஞ்சிபான இம்ரான் பூஸா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கஞ்சிபான இம்ரானுக்கு தொலைபேசிகளைக் கொண்டு சென்றமை தொடர்பில் கைது செய்யப்பட்ட தந்தையார் மற்றும் சகோதரன் உள்ளிட்டோரை விடுதலை செய்யக்கோரியே குறித்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சிறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை விடுதலை செய்யும் வரை இந்த உண்ணாவிரதம் தொடருமென அவர் தெரிவித்ததாக சிறைச்சாலைச் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ஐ)

## வெடிப்பு சம்பவம் இருவர் படுகாயம்



(தெமட்டகொட)

தெமட்டகொட, மஹவில கார்டன் பகுதியில் உள்ள வீடொன்றில் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதுடன் இச்சம்பவத்தில் இரு பெண்கள் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதற்கான காரணம் இதுவரையில் காணப்படவில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெமட்டகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பால் புரைக்கேறியதில் 3 மாதக்குழந்தை பலி

(கொழும்பு)


கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மூன்றுமாதக் குழந்தை பால் புரைக்கேறியதால் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தது.

வெலகெதர பிரதேசத்தைச் சேர்ந்த கண்ணங்கர கோரலகே நெத்சரா என்ற தாய் கொழும்பு நகர திடீர்மரண பரிசோதகர் மொஹமட் அப்ராஸிடம் சாட்சியமளிக்கும் போதே இந்தத் தகவலை தெரிவித்தார். தாயின் வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உயிரிழந்தது எனது குழந்தைதான். நான் திருமணம் முடித்து ஆறு வருடங்களாகியுள்ளன. எனது குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்டதால். வைத்தியசாலையில் சிகிச்சை அளித்து வந்தோம். குழந்தைக்கு ஹேர்னியா சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியதால். கடந்த 26 ஆம் திகதி மேற்படி சத்திரசிகிச்சை கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் செய்தோம். கடந்த 31 ஆம் திகதி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இடத்தில் வீக்கம் ஏற்பட்டிருந்தமையால் மீண்டும் வைத்தியசாலைக்குக் குழந்தையைக் கொண்டுவந்து சிகிச்சையளித்தோம்.

கடந்த 2 ஆம் திகதி குழந்தைக்கு ஊசியொன்று ஏற்றப்பட்டது. அன்று காலை 2.30 மணியளவில் ஏற்றப்பட்ட ஊசியால் முன்னேற்றம் ஏற்படவில்லை. குழந்தையின் உடல் மிகவும் குளிர்மையாக இருந்தது. குழந்தைக்குப் பாத்திரமொன்றில் பால் மாவை கரைத்துப் பருக்கினேன். பின்னர் குழந்தை "PBU" அறைக்கு கொண்டுசெல்லப்பட்டது. அங்கு சிகிச்சையளிக்கப்பட்டது. குழந்தை உயிரிழந்துள்ளதாக மருத்துவர் குழாம் எம்மிடம் தெரியப்படுத்தியதுடன் குழந்தைக்குப் பால் இறுகியமையின் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர் என அவர் மேலும் வாக்குமூலத்தில் தெரிவித்தார. (ஐ)

# பாலித தெவரப்பெரும மற்றும் ஐவரை விடுதலைசெய்யுமாறு போராட்டம்





(கொழும்பு)

களுத்துறையில் தோட்டத் தொழிலாளி ஒருவரின் சடலத்தை நீதிமன்ற உத்தரவை மீறி காணி ஒன்றில் பலவந்தமாக புதைத்த வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும மற்றும் ஐவரை விடுதலை செய்யக் கோரி ஹற்றன் என்பீல்ட், நோனாதோட்டத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மலையக தன்னெழுச்சி இளைஞர்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது நேற்று நோனா தோட்டத்தில் ஸ்ரீசெல்வவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக பதாகைகளை ஏந்தியவண்ணம் காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

உண்மையாக சேவை செய்யும் தலைவர்களை இணங்காண்போம், ஏமாற்று தலைவர்களை வெளியேற்றுவோம், பாலித விடுதலைக்கு இறையாசி வேண்டி பூசை செய்வோம் போன்ற பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது 75ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு செல்வ விநாயகர் ஆலயத்தில் செதுர் தேங்காய்கள் உடைத்து விசேட பூசைகளிலும் ஈடுபட்டமை குறிப்பிடதக்கது. (ஐ)

# 64 பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம்

(கொழும்பு)

64 பொலிஸ் அதிகாரிகளுக்கு அவசர இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2 பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், 2 பொலிஸ் அத்தியட்சர், 2 பிரதிப் பொலிஸ் அத்தியட்சர் உள்ளடங்கலாக 64 பொலிஸ் அதிகாரிகளுக்கே இவ்வாறு பதவி இடமாற்றம் வழங்கப்பட்டது. (ஐ)

# கருவை ஜனாதிபதி வேட்பாளராகவும் சஜித்தை பிரதமராகவும் அறிவியுங்கள்

## பிக்குகள் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கரு ஜெயசூரியவையும், பிரதமர் பதவிக்கு சஜித் பிரேமதாஸவையும் நியமிக்குமாறு நீதிக்கான சமூக தேசிய முன்னணியின் பிக்குகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

கரு ஜெயசூரியவின் வாழ்க்கை கடந்த காலத்திலும் தான், நிகழ்காலத்திலும் தான் எந்தவொரு நபருக்கும் விரல் நீட்ட முடியாத அளவு தெளிவாக காணப்படுகின்றது. எனவே, எந்தவித பேதங்களையும் பார்க்காமல் கரு ஜெயசூரியவுக்கு வேட்பாளர் பதவியை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் பிக்குகள் அமைப்பு மேலும் தெரிவித்தது. (ஐ)

# கரப்பந்து விளையாடிய அமைச்சர் சஜித்



(கொழும்பு)

அமைச்சர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான பாலித ரங்கே பண்டார ஆகியோர் பாடசாலை மைதானமொன்றில் கரப்பந்து விளையாடினர்.

புத்தளம், ஆனமடுவ, உஸ்வெவ ஸ்ரீரத்னபால மகா வித்தியாலயத்துக்கு 46 இலட்சம் ரூபாய் பெறுமதியான பேருந்து ஒன்று வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் சஜித் பிரேமதாஸ, குறித்த பேருந்தில் பயணம் செய்ததுடன், அதன் பின்னர் கரப்பந்து விளையாடியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1831

Search for people, places and things

### அபிதா

துணிவுதான் வாழ்க்கையின் ஊட்டச்சத்து. எந்தளவுக்கு அதிகம் துணிவுடன் இருக்கிறீர்களோ அந்தளவுக்கு உயிரோட்டம் உள்ளவர்களாக இருக்கிறீர்கள்



### வனஜா

மீதம் எவ்வளவு உள்ளது என்பது தெரியாமலே நாம் செலவு செய்வது காலம்



### ரோகினி

நிறம் பார்த்து வரும் அன்பு நிரந்தரம் இல்லை... மனம் பார்த்து வரும் அன்புக்கு மரணம் இல்லை



### பாமினி

பெண்ணின்பிரசவ அறையில் கணவன் இருப்பது கட்டாயமாக்கப்பட்டால் சில விவாகரத்துக்களும் பல பலாத்காரங்களும் குறைந்து விடும்



### சாந்தி

பலர் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது திறமை இல்லாமல் அல்ல... நேர்மையான எண்ணங்கள், நியாயமான வாழ்க்கை முறை கூட காரணமாக இருக்கலாம்....!



### ருக்மணி

எப்போது ஒருவர் மீது அதிகமாகக் கோபம் கொள்கிறாயோ... அப்பொழுதே புரிந்துகொள் நீ அவர்கள் மீது உயிராய் இருக்கின்றாய் என்று



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


## கட்சி பேதங்களை மறந்து

# அர்ப்பணிப்புடன் செயற்படுபவரை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்

## ஞானசார தேரர் கோரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், கட்சி பேதங்களை மறந்து அர்ப்பணிப்பு மிக்கதாக செயலாற்றக்கூடிய ஒருவரையே நாட்டின் தலைவராக மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கோரிக்கை விடுத்தார்.**



நுகேகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவித்ததாவது, "ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய, தேரர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதை நாம் தற்போது காணக்கூடியதாக உள்ளது.

இவர்களிடம் நாம் ஒன்றைக் கூறிக்கொள்கிறோம். நாட்டின் தற்போதைய நிலைமையில், கட்சியொன்றுக்கான தலைவர் ஒருவரை தெரிவு செய்வதை விட, இந்நாட்டை கட்டியெழுப்பக்கூடிய தேசிய தலைவர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டியதுதான் அவசியமாக உள்ளது.

கடந்த காலங்களில் விட்ட தவறுகளை நாம் மீண்டும் மேற்கொள்ளக்கூடாது. அப்பாவிடமிருந்து மகனுக்கும், மகனிடமிருந்து பேரனுக்கும் அதிகாரத்தை வழங்கும் வகையில், நாம் செயற்படக்கூடாது.

குடும்ப ஆட்சிக்கு இனியும் இடமளிக்கக்கூடாது. அர்ப்பணிப்புள்ள தலைவர் ஒருவரை தெரிவு செய்வதில்தான் மக்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

பொதுபல சேனா என்ற வகையில், எமக்கு என்று தனியான வேலைத்திட்டமொன்று இருக்கிறது.

நாம் எந்தக் கட்சிக்கும் ஆதரவானவர்கள் அல்ல. இந் நாட்டுக்கான சிறந்த தலைவரை தெரிவு செய்துவிட்டு, நாம் அவரிடம் ஒரே ஒரு கோரிக்கையைத் தான் முன்வைப்போம்.

அதாவது, அவர் கட்சி மற்றும் சின்னத்தை கைவிட வேண்டும். அவ்வாறு செய்யும் ஒருவரை நாம் இந்நாட்டின் தலைவராக்குவோம் என்பதை இவ்வேளையில் தெரிவிக்கிறோம் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# பாலித தெவரப்பெரும தேர்தலில் போட்டியிட்டால் நாம் ஆதரவு வழங்குவோம் -இராதாகிருஷ்ணன்



(கொழும்பு)

பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அவருக்கு நிச்சயம் வாக்களிப்பார்கள் என அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றன் டிக்கோயாப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்.பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும அண்மையில் சிறையில் வைக்கப்பட்டார். அவர் தவறிழைத்திருந்தால் அதற்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதிமன்ற தீர்ப்பை சவாலுக்குட்படுத்த முடியாது. அந்தத் தீர்ப்பை நாம் மதிக்க வேண்டும்.

எனினும் அவர் செய்த வேலையை நாம் பாராட்ட வேண்டும். என்னவென்றால் தோட்ட தொழிலாளி ஒருவர் இறந்தவுடன் அவரை அடக்கம் செய்வதற்கு தோட்ட அதிகாரி இடத்தை வழங்கவில்லை. இதற்கு எதிராக செயற்பட்டு பலவந்தமாக அவரின் சடலத்தை பிரதி அமைச்சர் அங்கு அடக்கம் செய்தார்.

அவர் தொடர்பில் மிகவும் மரியாதையுடன் நாம் பேச வேண்டும். தற்போது சிறையில் உள்ள அவர் விடுதலையடைந்து வெளியில் வந்தவுடன் மக்களால் போற்றப்படுவார். அதனை யாராலும் தடுக்க முடியாது.

அவர் பிரபல்யமான தலைவராக மாறுவார். குறிப்பாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் அவருக்கு பெரும்பான்மையான ஆதரவை வழங்குவார்கள். அவ்வாறான ஒரு தலைவரே தற்போது அவசியப்படுகின்றார்.எனவே ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்டால் பெருந்தோ ட்ட தொழிலாளர்கள் அவருக்கு நிச்சயம் வாக்களிப்பார்கள் என அ:வர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# செய்தித்துளிகள்

## ரயில் மோதியதில் பெண் ஒருவர் பலி

(கொழும்பு)

வெள்ளவத்த புகையிரத நிலையத்திற்கு அருகில் புகையிரதத்துடன் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார். கல்கிஸையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த புகையிரதத்தில் மோதியே குறித்த பெண் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. இவ் விபத்தில் புபுதுகம பகுதியை சேர்ந்த 29 வயதுடைய அமாலி சமுத்ரிகா எனும் பெண்ணே உயிரிழந்தார். இச் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மனைவி மீது அசிட் வீச்சு; கணவன் பொலிஸாரால் கைது

(ஹொரணை)

ஹொரணை - அங்குருவாத்தொட்ட பிரதேசத்தில் கணவன், மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறின் போது மனைவி மீது அசிட் வீச்சு தாக்குதலை மேற்கொண்ட கணவரை பொலிஸார் கைது செய்தனர். இச் சம்பவத்தில் காயமடைந்த குறித்த பெண் ஹொரணை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிதி மோசடி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரி செலுத்தாமல் விற்பனை பெற்றுக் கொண்டதனூடாக இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் அசோக் ரங்வலவால், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இந்திய நிறுவனம் ஒன்றால் டெண்டர் நடைமுறைக்கு மாற்றமாக மோசடி நிதி அறிக்கைகளை சமர்ப்பித்து, அரசாங்கத்துக்கு, டொலர் மில்லியன் கணக்கில் மோசடி செய்ததாக, குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் முதற்கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவால் குறித்த முறைப்பாடு பொலிஸ் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 130 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 160 | 250 |
| தக்காளி | 180 | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 120 | 110 | 60 | 120 |
| கரட் | 100 | 120 | 90 | 120 |
| பூசணி | 80 | 60 | 40 | 80 |
| புடோல் | 120 | 70 | 60 | 120 |
| வாழைக்காய் | 140 | 100 | 110 | 140 |
| சின்ன வெங்காயம் | 120 | 80-150 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 120 | 160 |
| பாகற்காய் | 200 | 180 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 160 | 120 | 60 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 100 | 70 | 60 | 120 |
| கறிமிளகாய் | 200 | 130 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 60 | 80 |
| போஞ்சி | 240 | 250 | 200 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 100 | 120 |
| கீரை-1பிடி | 40 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 20-40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 300 | 280 | 150 | — |
| வெங்காயப்பூ | 200 | — | 100 | 240 |
| முள்ளங்கி | 80 | — | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 60 | 120 | — |

# சிறுவர் அரங்கம்

## போலிகள் ஜாக்கிரதை



சோமசுந்தரம் பல வருடங்களாக ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை விற்பனை செய்து வந்தார். அவர் கடையில் பொருட்கள் வாங்கினால் அது ஒரிஜினலாக இருக்கும் என்ற பெயர் இருந்ததால் அவரிடம் பல வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வாங்கி வந்தனர்.

அவரது வியாபாரம் சிறிய முதலீட்டில் நடைபெற்றதாலும் இலாப சதவீதம் குறைவு என்பதாலும் அவருக்கு சுமாரான வருமானமே கிடைத்து வந்தது. உண்மையாகக் கணக்குக் காட்டி விற்பனை வரி, வருமான வரி ஆகிய வரிகளை முறையாகக் கட்டி வந்தார். இதுவும் அவர் குறைவான வருமானத்துக்கு ஒரு காரணம்.

ஆயினும் சோமசுந்தரம் தனது சீரான வியாபாரம் குறித்தும், பெரிய விற்பனையாளர்கள் கூட அவர் பெயரைத் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்குத் தனக்கு இருக்கும் நற்பெயர் குறித்தும் மனத் திருப்தியுடனேயே இருந்தார்.

ஒருமுறை அவரது பழைய நண்பர் வீரமுத்து அவர் கடைக்கு வந்தார். நீண்ட நாட்கள் கழித்துச் சந்தித்ததால் இருவரும் பல விடயங்கள் பற்றி சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

பேச்சு வியாபாரம் பற்றித் திரும்பியது. சோமசுந்தரத்தின் வியாபாரம் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்தபின் வீரமுத்து சொன்னார்: "என்னப்பா பிழைக்கத் தெரியாதவனா இருக்கியே? இத்தனை வருஷமா வியாபாரம் செஞ்சதுக்கு நீ இந்த ஏரியாவில ஒரு பெரிய கட்டடத்தையே வாங்கியிருக்கணும். ஆனா நீ இன்னும் வாடகை இடத்துல இருந்துக்கிட்டு பெட்டிக் கடை மாதிரி நடத்திக்கிட்டிருக்கே. பிளாட்ஃபாரத்தில வியாபாரம் செய்யறவங்க கூட கிடுகிடுன்னு முன்னுக்கு வந்துடறாங்க. நீ இன்னும் இப்படியே இருக்கியே!"

"என்ன செய்யிறது? அதிகமா முதலீடு செய்ய என்கிட்டே பணம் இல்லே. வர இலாபம் குடும்பச் செலவுக்குத்தான் சரியா இருக்கு. ஆனா எனக்கு இதில ஒண்ணும் வருத்தம் இல்லை. எனக்கு மார்க்கெட்டில நல்ல பேரு இருக்கு. வாற வருமானம் எனக்குப் போதும்."

"உன் லாபத்தை சுலபமா அதிகரிக்க நான் ஒரு வழி சொல்றேன்" என்று வீரமுத்து தனது யோசனையைச் சொன்னார்.

"அதெல்லாம் வேண்டாம்ப்பா. டியூப்ளிகேட் பார்ட் எல்லாம் வித்தா என் பேர் கெட்டுப் போயிடும். என்னோட நல்ல பெயர்தான் எனக்கு இருக்கிற ஒரே சொத்து." என்றார் சோமசுந்தரம்.

"நீ பல பார்ட்களை விக்கறே. நான் சொல்றது ஒரு பார்ட்டைப் பத்தித்தான். இந்த பேரிங்கைப் பத்தி மட்டும்தான். உன் மொத்த பேரிங் விற்பனையில ஒரு பத்து சதவீதம் டியூப்ளிகேட் பேரிங்கைக் கலந்து வித்துடு. பேரிங் எல்லாம் அடிக்கடி உடையறது சகஜம்தான். சரியா ஓயில் போடாதது. வண்டியை ஒழுங்கா ஓட்டாதது மாதிரி காரணங்களால கூட பேரிங் உடையும்.

"பேரிங் உடைஞ்சா பெரும்பாலும் அதை யாரும் பெரிசு படுத்தமாட்டாங்க. அதோட இந்த டியுப்ளிகேட் பேரிங் எல்லாம் உனக்கு பில் இல்லாமலேயே சப்ளை பண்ண நான் ஏற்பாடு செய்யிறேன். நீயும் பில் கேட்காத கஸ்டமர்களாகப் பாத்து இந்த பேரிங்குகளைத் தள்ளி விட்டுடு. வாங்கறது. விக்கறது ரெண்டுமே கேஷ். ஓங்கிட்ட ரிகார்டே இருக்காது.

"யாராவது வந்து பேரிங் உடைஞ்சு போச்சேன்னு கேட்டா அது உன் கடையில வாங்கினது இல்லேன்னு அடிச்சுச் சொல்லிடு. நூத்தில ஒண்ணு ரெண்டு பேர் தான் அப்படி வந்து கேட்பாங்க. பில் கொண்டு வாங்க, மாத்தித் தரேன்னு சொன்னா போயிடுவாங்க. பில் வாங்கினமா இல்லையான்னே நிறைய பேருக்கு ஞாபகமே இருக்காது."

சோமசுந்தரம் "அதெல்லாம் வேண்டாம்ப்பா!" என்று முதலில் மறுத்தார். வீரமுத்து விடாமல் அவரிடம் பேசியதைத் தொடர்ந்து 'கொஞ்ச நாள் செஞ்சுதான் பாப்பமே! என்ன ஆயிடப் போவுது? ஏதாவது பிரச்சினை வரும் போலத் தெரிஞ்சா உடனே நிறுத்திடலாம். நாம என்ன அக்ரிமென்ட்டா போடப் போறோம்?' என்று நினைத்து "சரி" என்றார்.

சோமசுந்தரம் டியூப்ளிகேட் பேரிங்குகளை விற்பனை செய்ய ஆரம்பித்து இரண்டு மாதங்கள் ஆகி விட்டன. வீரமுத்து சொன்னது போல் வருமானம் அதிகரித்தது. பிரச்சினை எதுவும் வரவில்லை.

ஒருநாள் ஒரு உடைந்த பேரிங்கைக் கையில் எடுத்துக் கொண்டு ஒருவர் வந்தார். "சேர், இதை உங்க கடையிலதான் வாங்கினேன். ஒரு வாரத்துக்குள் உடைஞ்சு போச்சு. மெக்கானிக் இது டியூப்ளிகேட்னு சொல்றாரு" என்றார்.

சோமசுந்தரம் தன் பதற்றத்தை மறைத்துக்கொண்டு, பேரிங்கைக் கையில் வாங்கி உற்றுப் பார்த்தார். "ஆமாம். இது டியூப்ளிகேட் பேரிங்தான். ஆனா இது எங்க கடையில வாங்கினது இல்லையே. நாங்க ஒரிஜினல் தான் விக்கறது" என்றார்.

"இல்லை சார். நான்தான் வாங்கினேன். உங்க கடையிலதான் வாங்கினேன்."

"சரி. பில் குடுங்க. மாத்திக் கொடுக்கிறேன்."

"நீங்க பில் குடுக்கவே இல்லையே!"

"சாரி சார். நாங்க பில் இல்லாம விக்கறது இல்லை" என்றார் சோமசுந்தரம்.

வந்தவர் போய் விட்டார்.

இதற்குப் பிறகு சோமசுந்தரம் டியூப்ளிகேட் பேரிங்குகளை விற்பதை ஒரு வாரத்துக்கு நிறுத்தி வைத்திருந்தார். வேறு யாரும் வந்து எதுவும் கேட்கவில்லை. ஒரு வாரத்துக்குப் பிறகு மீண்டும் அவற்றை விற்கத் தொடங்கினார்.

ஒரு மாதத்துக்குப் பிறகு, அவருக்கு பார்ட்கள் சப்ளை செய்யும் மும்பை நிறுவனத்திலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவரிடம் அடிக்கடி பேசும் அதிகாரிதான் பேசினார். ஆனால் இந்த முறை, "எப்படி இருக்கிறீர்கள்?' என்ற விசாரிப்புகள் இல்லாமல் பேச்சைத் தொடங்கினார்.

"மிஸ்டர் சோமசுந்தரம். நீங்கள் இருபது வருடங்களாக எங்கள் பொருட்களை விற்று வருகிறீர்கள். இதுவரை நம் இருவரிடையேயும் எந்தப் பிரச்சினையும் எழுந்ததில்லை. ஆனால் சமீபத்தில் நீங்கள் டியூப்ளிகேட் பாகங்களை விற்பதாக எங்களுக்கு ஒரு புகார் வந்தது.

"உங்களிடம் பில் இல்லாமல் பேரிங் வாங்கிய ஒருவர் பேரிங் உடைந்ததைப்பற்றி உங்களிடம் புகார் செய்தபோது, நீங்கள் அது உங்கள் கடையில் வாங்கியதில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர் இது பற்றி எங்களிடம் புகார் செய்தபோது, முதலில் நாங்கள் அதை நம்பவில்லை. பிறகு அந்தப் புகார் உண்மையா என்று விசாரிப்பதற்காக எங்கள் ஆட்கள் சிலரை அனுப்பி உங்கள் கடையில் இருந்து பேரிங் வாங்கச் செய்தோம். அவர்களில் இரண்டு பேருக்கு பில் இல்லாமல் நீங்கள் டியூப்ளிகேட் பேரிங் கொடுத்திருக்கிறீர்கள்."

"சேர். இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. எனக்குத் தெரியாமல் என் கடையில் வேலை செய்யும் ஆட்கள் யாராவது இதைச் செய்திருக்கலாம். நான் விசாரிக்கிறேன். இதை உடனே நிறுத்தச் செய்கிறேன்.."

"தேவையில்லை மிஸ்டர் சோமசுந்தரம். நாங்கள் தீர விசாரித்து விட்டோம். உங்களுக்கு இந்த டியூப்ளிகேட் பேரிங்குகளை சப்ளை செய்வது யார், ஒரு மாதத்துக்கு எத்தனை பேரிங் வாங்குகிறீர்கள் என்ற எல்லா விபரங்களையும் நாங்கள் சேகரித்து விட்டோம். இன்றிலிருந்து நீங்கள் எங்கள் நிறுவனத்தின் டீலர் இல்லை. இது பற்றி எங்களிடமிருந்து முறையான கடிதம் உங்களுக்குத் தபாலில் வரும். ஏற்கனவே நாங்கள் சப்ளை செய்த பொருட்களுக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கழித்துக்கொண்டு மீதமுள்ள உங்கள் டீலர் டெபாசிட் தொகையை உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்."

"சேர். தெரியாமல் தவறு செய்து விட்டேன். இந்த ஒரு முறை மன்னித்து விடுங்கள். இனி இந்தத் தவறு நேராது. இருபது வருடங்களாக நான் நேர்மையாக நடந்து கொண்டிருக்கிறேன்..."

"என் தனிப்பட்ட வருத்தம் அதுதான் சேர். இருபது வருடங்களாக நீங்கள் காப்பாற்றி வந்த நேர்மையை இரண்டே மாதங்களில் தொலைத்து விட்டீர்களே! உங்களோடு இத்தனை வருடங்கள் பழகியவன் என்ற வகையில் தனிப்பட்ட முறையில் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். குட் லக்."

உரையாடல் முடிந்தது. உரையாடல் மட்டும்தானா?

**குறள் 39:**

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

**பொருள்:**

அறநெறியில் செயற்படுவதன் மூலம் வருவதுதான் இன்பம். அறத்துக்கு மாறாகச் செயற்பட்டால் நன்மையும் கிடைக்காது. நற்பெயரையும் இழக்க நேரிடும்.

## பழமொழிகள்

- கீறி ஆற்றினால் புண் ஆறும்.
- எள்ளுக்கு ஏழு உழவு , கொள்ளுக்கு ஒர் உழவு.
- எழுத்தறச் சொன்னாலும் பெண் புத்தி பின் புத்தி.
- நித்திய கண்டம் பூரண ஆயிசு.
- மழை விட்டாலும் தூவானம் விடவில்லை.
- எச்சிற்கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா?

## விடுகதைகளும் விடைகளும்

- கீழே வரும் ஆனால் மேலே போகாது. அது என்ன?
  மழை
- அடிப் பாதை இருக்கும் கால் இருக்காது. அது என்ன?
  நத்தை
- இளமையில் உயரம் முதுமையில் கட்டை அது என்ன?
  மெழுகுவர்த்தி
- மாடிகளற்ற வீட்டில் எல்லா பொருட்களும் நீல நிற பூச்சு பூசப்பட்டிருப்பின் அதன் படிகள் எந்த நிறத்தில் இருக்கும்?
  படிகள் இருக்காது

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு
~ பாரதிதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பார்க்கும் இடம் எங்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரலை

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு

இது பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்.

இந்தப் பாடலின் உன்னதம் கண்டோர் தமிழே தம் மூச்சு என்று வாழ்வர்.

தமிழ் மொழி உலக மொழிகளின் தலைமை மொழி. மொழிகளின் தலைமகன் யார் என்பதல்ல கேள்வி.

மொழிகளின் தாய் யார்? என்பதுதான் இங்கு முக்கியமான கேள்வி. இதற்கான பதில் தமிழ் மொழிதான் மொழிகளின் தாய்.

எங்கள் தாய் பிரசவித்த மொழிகள் ஏராளம். பிள்ளையைப் பெற்று பேணிப் பாதுகாத்து கால சூழலுக்கேற்ப அவர்களை வளர்த்து ஆளாக்கி விடுகின்ற தாயானவள். முதுமை என்ற கால சூழலுக்குள் அகப்பட்டுக் கொள்ள,

பிள்ளைகள் எங்கும் பரந்து விரிந்து நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை உள்வாங்கி உயர்ந்து நிற்பது இயற்கையின் நியமம். இதுவே ஏனைய மொழிகளின் வளர்ச்சியாயிற்று.

எனினும் எல்லா மொழிகளினதும் மூல வேர் முக்கியமானது. ஆம், எல்லா மொழிகளினதும் தாயாக, ஆதி மொழியாக, செம்மொழியாக இருக்கின்ற எங்கள் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் நாம் எனும்போது, யாம் பெற்ற பேறு யார் பெறுவர் என்று உரத்துக் கூற முடியும்.

இவ்வாறு ஆதி மொழியாய், ஆதி இனமாய் வாழ்ந்த தமிழினம் இன்று இலங்கைத் தீவில் படுகின்ற அவலங்கள், அனுபவிக்கின்ற துன்பங்கள் கொஞ்சமல்ல.

தமிழையும் தமிழ் இனத்தையும் அழித்துச் சமாதி கட்டத் துடிக்கின்ற நீசர்களின் நெட்டூரம் சொல்லுந்தரமன்று.

யுத்த அழிவுகள், உயிரிழப்புகள், காணாமல் ஆக்கப்படுதல், சிறைகளில் அடைத்தல், நில அபகரிப்பு, வரலாற்றைத் திரிவுபடுத்தல் என ஏகப்பட்ட கொடுமைத்தனங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

இந்த நிட்டூரங்களுக்கு அரசியல் தரப்பினர் தீர்வு பெற்றுத் தருவர் என்று நம்பினோம். ஆனால் அந்த நம்பிக்கை வீண்போனது. அவர்கள் தமிழினத்தை மறந்து ஆளுந்தரப்புடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

எனவே அவர்களை நம்புவது இன்னும் நமக்குக் கேடு தரும் என்பதை காலம் உணர்த்தி நிற்கிறது. இத்தகையதோர் இக்கட்டான சூழ்நிலையில்தான் தமிழ் மக்கள் தங்கள் உயிராகிய தாய்மொழியாம் தமிழையும் தமிழினத்தையும் காப்பாற்ற உறுதி கொண்டெழுந்தனர்.

அந்த உறுதி எழுக தமிழாக எழுச்சி பெற்றுள்ளது.

ஆம், எங்கு பார்த்தாலும் எழுக தமிழ் கோசம். இதயம் நெகிழ்கிறது. எங்கள் அன்னை தமிழை எந்தக் கொம்பனாலும் எதுவும் செய்ய முடியாது என்ற மனத்திடம் நெஞ்சுரமாய் நிமிர்கிறது.

**இன்று நடக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியின் பிரவாகம் தமிழ் இனத்தை வாழ வைக்கும். இது இறைவன் மீது சத்தியம்.**

# சுதந்திரக்கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்படும்

## சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி எச்சரிக்கை

(கொழும்பு)

கட்சியால் எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒத்துழைப்புக்களை வழங்காவிட்டால், அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் நீக்கப்படும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "இவர்கள் அனைவரதும் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது.

கட்சிக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பாக அவர்களால் அனுப்பப்பட்ட தன்னிலை விளக்கத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தினாலேயே நாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

அத்தோடு, அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் நாம் தீர்மானித்துள்ளோம். இதற்கான அறிவிப்புக்களை நாம் விரைவில் அவர்களுக்கு விடுக்கவுள்ளோம். அதற்கிணங்க, அவர்கள் கட்டாயம் இவற்றுக்கு பதிலளித்தே ஆகவேண்டும்.

ஒழுக்காற்றுக் குழுவில் அவர்கள் முன்னிலையாகாவிட்டால் அல்லது விசாரணைகளில் அவர்கள் முறையான பதிலை வழங்காவிட்டால், அவர்களின் பாராளுமன்ற உறுப்புரிமையும் பறிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் நீதிமன்றுக்குச் சென்றே, அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாக இருக்கும்" என்று அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில், எஸ்.பி.திசாநாயக்க, டிலான் பெரேரா, ஏ.எச்.எம்.பௌசி, லக்ஷ்மன் யாப்பா மற்றும் விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோரின் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# சம்மாந்துறையில் வெடிபொருட்கள் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்புமடு பிரதேசத்தில் வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினை அடுத்து இந்த வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

அப்பிரதேசத்தில் கல்குவாரி அருகே பாவனையற்ற காணியில் புதைக்கப்பட்ட நிலையில் அமோனியா ஜெலக்னைட் குச்சிகள் உள்ளிட்ட பல்வேறு வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

குறித்த வெடிபொருட்கள் தொடர்பாக சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

# மஹா கும்பாபிஷேகம்

மாந்தை மேற்கு குறிஞ்சாக்குளம் அருள் மிகு அம்பாரவேல் பிள்ளையார் கோவில் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆலய போசகரும்,மாந்தை மேற்கு பிரதேச செயலாளருமான எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத் தில் அறிவியல் நகர், MAS Active, யுனிச்செலா, விவசாய பீடம், கார்கில்ஸ் Argo, வெள்ளாங்குளம் இராணுவ முகாம், ஆனந்தபுரம், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலையாளபுரம், இரணைமடு சந்தி, NAITA, கிளிநொச்சி வைத்தியசாலை,இலங்கைதொலைத்தொடர்பு நிலையம், Wickramaratne pvt LTD, Ware House Complex, இராணுவ ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், பாலியாறு, மூன்றாம்பிட்டி, தேத்தாவடி, அந்தோனியர்புரம், இலுப்பைக்கடவை, கள்ளியடி ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# இளைஞன் மீது பொலிஸார் தாக்குதல்

## பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இளைஞன் ஒருவர் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் வன்னிப் பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட இளைஞனால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்

வவுனியா, கூமாங்குளம் மதுபான நிலையம் அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் நேற்று முன்தினம் மதியம் இளைஞன் ஒருவர் பய ணித்துள்ளார். எதிர்த்திசையில் பொலிசார் வாகனத்தில் வந்துள்ளனர். பொலிஸாரின் வாகனம் செல்வதற்கு இடம் விட்ட பின்னர் குறித்த இளைஞன் அப்பகுதியில் இருந்த மதுபானசாலைக்குள் சென்றுள்ளார். இதன்போது குறித்த இளைஞனை பின் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் மதுபான நிலையத்திற்குள் சென்ற குறித்த இளைஞனை தாக்கியதுடன், நீதிமன்ற பிடியாணை இருப்பதாக தெரிவித்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்திற்கு சென்ற குறித்த இளைஞனின் மனைவி ஏன் கணவரை கைது செய்தீர்கள் என விசாரித்த போது பிடியாணை இல்லை. சந்தேகத்தில் பிடித்தோம். விடுவிப்போம் எனத் தெரிவித்தனர். இருப்பினும் மது போதையில் குழப்பம் விளைவித்ததாக குறித்த இளைஞன் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், நீண்ட நேரம் தடுத்து வைத்திருந்து விட்டு இரவு விடுவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த மதுபான நிலையத்தில் வைத்து பொலிஸார் இளைஞன் மீது தாக்கும் சீசீடிவி வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளது. இதனை ஆதாரமாக கொண்டு வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் குறித்த பொலிஸாருக்கு எதிராக பாதிக்கப்பட்ட இளைஞன் முறைப்பாடு செய்துள்ளார். (9-250)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பூரண சக்தி- குறுகிய ஆற்றல்



ஆதியென்றும், பிரம்மம் என்றும் சொல்லப்படும் சர்வ வியாபக பூரண சக்தியே தான் "நாம்" அல்லது "நான்" என்பதாகும் என்று ஒரு நண்பருக்கு விளக்கம் சொன்னேன். அவருக்கு அந்த அத்வைதத் தத்துவம் புரியவில்லை. நாம் பிரம்மமா? சர்வ வல்லமையும் உடையது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகையால், அத்தகைய பிரம்மம் நாம் எனில் ஜீவன்களின் இன்ப துன்பச் சுழலுக்கே காரணமாக இருக்கும் இந்த உலகை ஊதி அழித்துவிட முடியுமா? ஏதோ அதைச் செய்து காட்டுங்கள் எனக் கேலியாகவே கேட்டார்.

அதற்கு, ஆம்! பிரம்மம் என்ற நிலையில் நமக்குச் சர்வ வல்லமையும் இருக்கிறது. ஆனால், எண்ணம் மட்டும் இல்லை. அப்படி ஏற்பட்டவுடன் அந்த நிலைக்கு அறிவு எனப் பெயரிட்டு அழைக்கிறோம். இந்த அறிவு என்ற நிலையில் எந்தச் சோதனையோ நடத்தவேண்டுமெனில், அந்தச் சக்தி சொரூப அளவில் மட்டும் சுருங்கி அதற்கேற்ற ஆற்றலுடன் மட்டிலும் செயலாற்றுகின்றது.

ஆகவே, எண்ணும் நிலையில் எண்ணம் தோன்றும். உருவ அளவிலே ஒடுங்கிய - குறைவுபட்ட - பின்ன சக்தியாகவும், எண்ணமற்ற நிலையில் நிறைந்த நிர்விகற்ப பூரணமாகவும், இருக்கிற நம் நிலையை அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் என விளக்கினேன்.

# கிராஞ்சி இளம்தாரகையை வென்றது பள்ளிமுனை சென்.லூசியா அணி



முத்துக்கள் மூன்று புகழ் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக் கழகம் மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் எடிசன் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பள்ளிமுனை சென்.லூசியா அணியை எதிர்த்து கிராஞ்சி இளந்தாரகை அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் சென். லூசியா அணி வெற்றி பெற்றது. லூசியா அணி சார்பாக அசோக், கிருத்தீன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக்கொடுத்தனர். (க)

# வென்றது நெடுங்கண்டல் சென். அன்ரனீஸ் அணி



முத்துக்கள் மூன்று புகழ் பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக் கழகம் மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் எடிசன் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நெடுங்கண்டல் அன்ரனீஸ் அணியை எதிர்த்து நானாட்டன் றீகன் ஸ்ரார் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனீஸ் அணி வெற்றி பெற்றது.

அன்ரனீஸ் அணி சார்பாக அஜி . டிலைக்சன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

# 19 வயதுப்பிரிவு தேசியமட்ட கால்பந்தாட்டம் இலங்கை அணியில் இணைந்த றெக்சன்-பிரசாந்





தெற்காசிய உதைபந்தாட்ட கூட்டமைப்பின் 19 வயதிற்குட்பட்ட தொடருக்கான இலங்கை அணியில் புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் இருவர் இடம் பெற்றுள்ளதாக அறிய முடிகிறது.

19 வயதிற்குட்பட்ட "SAFF" கிண்ண தொடருக்காக இலங்கை ஜூனியர் உதைபந்தாட்ட அணி நேபாளம் செல்லவுள்ள நிலையில் இவ் அணியில் புனித கல்லூரி வீரர்களான பாக்கியநாதர் றெக்சன் மற்றும் மரியநேசன் பிரசாந்த் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

கடந்த வருடம் தேசிய ரீதியில் இடம்பெற்ற பாடசாலை மட்ட தொடர்களில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்த இவர்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி உதைபந்தாட்ட அணி தேசிய மட்டத்திலான பிரிவு-2 தொடரில் கிண்ணம் வென்று தரம் ஒன்றிற்கு முன்னேறுவதற்கும் முக்கிய பங்கை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வடமாகாண விளையாட்டு விழா யாழ்.மாவட்டம் முதலிடம்









வட மாகாண விளையாட்டு விழா அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இவ் விளையாட்டு விழா வில் புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட அணி முதலாம் இடத்தையும் முல்லைத்தீவு மாவட்ட அணி இரண்டாம் இடத்தையும் கிளிநொச்சி மாவட்ட அணி மூன்றாம் இடத்தையும் பெற்றது. (க)

# தேசிய கால்பந்தாட்ட அணியில் இணைந்த பத்திரிசியார் கல்லூரி வீரர் ஜெரோம்



இலங்கை 16 வயது பிரிவு தேசிய அணியில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி வீரர் ஜெராட் ஜெரோம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

ஆசிய காற்பந்து சம்மேளன வெற்றிக் கிண்ணத்திற் கான கால்பந்தாட்ட தொடர் கடந்த 14ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஜோர்தானில் நடைபெறவுள்ளது.

இத் தொடரில் பங்குபற்றுவதற்கான இலங்கை அணியிலேயே ஜெரோம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# அவுஸ்திரேலிய அணியில் வோனருக்கு இடமுண்டு

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் டேவிட் வோனர் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

இதுவரை 9 இன்னிங்சில் களம் இறங்கி ஒரு அரைசதம் மட்டுமே அடித்தீள்ளார். தொடர்ச்சியாக மூன்று முறை டக்அவுட் ஆகியுள்ளார். என்றாலும், அவுஸ்திரேலியா வில் நடைபெற இருக்கும் டெஸ்ட் தொடரில் டேவிட் வோனருக்கு கட்டாயம் இடம் உண்டு என அந்த அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற இருக்கும் பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான தொடரின்போது அவுஸ்தி ரேலிய அணியில் யார்? யார்? இருப்பார்கள் என்று ரிக்கி பொண்டிங் கூறுகையில் "ஓவல் டெஸ்டின் 2-வது இன்னிங்சில் வோனர் மீண்டும் ஒருமுறை டக் அவுட் ஆனாலும் நான் கவலைப்பட மாட்டேன். அவுஸ்திரேலிய அணியில் அவர் இருப்பார்.

இதேபோல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் ஸ்மித் மற்றும் மார்னஸ் லாபஸ சாக்னே ஆகியோருக்கும் இடம் கிடைக்கும். மிடில் ஓர்டர் வரிசையில் வடே, ரூாவிஸ் ஹெட் ஆகியோரின் இடம் கேள்விக்குறியே" என்றார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## புகையிரதம்...

அருகில் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது.

நேற்று 1.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது இரண்டு ரயில் பெட்டிகள் தடம்புரண்டுள்ளன. இதனால் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டிருக்கிறது.

தரம்புரண்ட இரண்டு பெட்டிகளையும் மீண்டும் தண்டவாளத்தில் ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் மேலும் தெரிவித்தது.

ரயில் பெட்டிகள் தடம் புரண்டபோதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன. (ஞா)

## மக்கள் வங்கி...

ஏற்பட்ட திடீர் தீ காரணமாக இயந்திரப் பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வங்கியின் இயந்திர பகுதியிலிருந்து தீ ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து வல்வெட்டித்துறை பொலிஸார், பொதுமக்கள் மற்றும் யாழ் மாநகர சபை தீயணைப்பு படையினர் இணைந்து தீயை கட்டுப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா-60)

## பாராளுமன்ற...

கலந்துரையாடப்படும் என அக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையாகவுள்ளார். இதற்கு முன்னர் பெறப்பட்ட சாட்சிய பதிவுகளின்போது ஜனாதிபதி மீதே பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பாதுகாப்பு சபை கூட்டம் தொடர்பான விடயங்கள் தொடர்பாகவே பாராளுமன்ற தெரிவுக்குழு ஜனாதிபதியை கேள்வியெழுப்பவுள்ளதாக பாராளுமன்ற தெரிவுக்குழு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் சாட்சியங்களை பெற்ற பின்னர் தெரிவுக்குழுவில் சாட்சியங்கள் முடிவுக்கு வர உள்ளன. இருப்பினும் குழுவின் இறுதி அறிக்கையைத் தொகுத்து முடிக்க பாராளுமன்றத்தில் கால அவகாசம் கோரப்படும். இதன் பின்னர் அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## பலாலிக்கு...

கட்டுமானப் பணிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும் நிர்மாணப்பணிகள் நூற்றுக்கு 70 வீதம் நிறைவடைந்துள்ளதாகவும், அதேபோன்று விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் வழங்கும் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் நிர்மாணப்பணிகள் 55 வீதமும் நிறைவடைந்துள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந் நிர்மாணப்பணிகளை பார்வையிடுவதற்காக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று பலாலி விமான நிலையத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாட்களில் பலாலி விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமான சேவைகளை ஆரம்பிக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

எனவே ஒக்ரோபர் 10ஆம் திகதிக்கு முன்னர் நிர்மாணப்பணிகள் நிறைவடையச் செய்வதற்கு சிவில் விமான சேவைகள் அமைச்சினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிர்மாணப்பணிகள் முறையாக முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதை பரிசீலிப்பதற்காகவே அமைச்சர் இந்த திடீர் விஜயத்தினை மேற்கொண்டதாக போக்குவரத்து அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அத்தோடு இந்த திடீர் விஜயத்தில் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளோ அல்லது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் வழங்கும் நிறுவனத்தின் அதிகாரிகளோ இன்றி அமைச்சரின் தனிப்பட்ட விஜயமாக அமைந்திருந்தமை விஷேட அம்சமாகும் என்றும் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஞா)

## தமிழ் மக்கள்...

றவு சமாசங்கள், சிகையலங்கரிப்பாளர் சங்கங்கள் என ஒட்டு மொத்த அமைப்புக் களும் தமது பேராதரவை வழங்கியுள்ள நிலையில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் தழுவியதாக யாழ்ப்பாண மண்ணில் இன்று எழுக தமிழ்எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது. (ஞா)

## வதந்திகளை...

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நலிவுறச் செய்யும் வகையில் ஒரு சில வர்த்தக சங்கங்களின் பெயர்களைப் பயன்படுத்தி கடைகளை பூட்ட வேண்டாம் என்ற அநாமதேய அறிக்கைகள் வெளியாகியுள்ளதாக அறிய முடிகிறது.

முன்னெப்போதும் இல்லாதவாறு பொது அமைப்புக்களின் பேராதரவுடன் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி திட்டமிட்டபடி இன்று நடைபெறும். (ஞா)

## ஜனாதிபதி வேட்...

வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருகின்ற போதும், இதுவரையில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு யாரும் அவ்வாறான அறிவிப்பை வழங்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கில் இருந்தோ, மலையகத்தில் இருந்தோ இதுவரையில் எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது சுயாதீனக் குழுவோ, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருப்பதாக தங்களுக்கு தெரியப்படுத்தவில்லை.

அதேநேரம், அரசியல் யாப்பின் படி, சுயாதீன குழு ஒன்றின் ஊடாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற யாராக இருந்தாலும், அவர் முன்னாள் அல்லது இந்நாள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும்.

அவ்வாறு அல்லாதவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் ஊடாகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

# ஐ.நா தொடர்பான செயற்பாட்டுக்குழு இலங்கை குறித்து ஆராயவுள்ளது

பலவந்தமாக அல்லது தன்னிச்சையற்ற காணாமல் ஆக்கப்படுதல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுக்குழு இலங்கை குறித்து ஆராயவுள்ளது.

இந்தக் குழுவின் 119ஆவது அமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இலங்கை உட்பட 36 நாடுகளில் பதிவான 530 காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான சம்பவங்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இதுதவிர, சுதந்திரமாக செயல்படும் ஐந்து மனித உரிமைகள் தொடர்பான நிபுணர்களைக் கொண்ட குழுவினர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திக்கவுள்ளனர்.

இந்த நிபுணர் குழுவினர், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ள நாடுகளின் அரச அங்கீகார பிரதிநிதிகள், சிவில் சமூகம் மற்றும் இது தொடர்பான ஆர்வலர்கள் உட்பட பலரை சந்தித்து உரையாடவுள்ளனர்.

குறிப்பிட்ட 36 நாடுகளுக்கு இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் விஜயம் செய்யும்போது, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளில் ஏற்படும் பின்னடைவு மற்றும் அதற்கான காரணங்களை கண்டறிவதில் அந்த நிபுணர் குழுவினர் அதிக கவனம் செலுத்துவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞா)

ஜனாதிபதித் தேர்தலில்

# ஐக்கிய தேசியக் கட்சியினால் தனித்து வெற்றியீட்ட முடியாது

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டும் தனித்து போட்டியிட்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

விரிவான கூட்டணி உருவாக்கக்கூடிய அதற்கான செயற்பாட்டு திட்டமொன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ள அனைத்து நபர்களுக்கும் தாம் ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு அடிப்படை மட்டும் போதுமானதல்ல எனவும் நட்பு சக்திகளையும் ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ள அனைத்து நபர்களிடமும் வெற்றியீட்டக் கூடிய வழிமுறைகளை முன்மொழியுமாறு தாம் கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஞா)

கொழும்பு புறநகர்ப் பகுதியில்

# துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் நேற்றிரவு குழுவொன்று நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இன்னொருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹங்வெல்லை, எம்புல்கம சந்தியில் வான் ஒன்றில் வந்த குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 23 வயதான இளைஞன் உயிரிழந்துள்ளார்.

26 வயதான மற்றைய இளைஞன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)


கொவிசெத
திகதி 2019.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 2241
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 15 20 38 45
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-09-15
சீட்டிழுப்பு இலக்கம் 201
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 57 72 77 79
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/09/15
சீட்டிழுப்பு இலக்கம் 0598
லக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 31 40 59 72
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/09/15
சீட்டிழுப்பு இலக்கம் 4006
ஆங்கில எழுத்து O
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 9 0 7 4 2
தேசிய லொத்தர் சபை


அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 732 வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.09.15
விசேட இலக்கம் 2633
வெற்றி இலக்கங்கள் 06 16 21 60
ஆங்கில எழுத்து G

ராசி அதிர்ஷ்டம்
திகதி 15/09/2019 வெற்றி வாரம் 2618 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் துலாம் 18 31 55 60
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,482, 412
2019/09/16 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14/09/2019 வெற்றி வாரம் 2617 வர்ணம் இளம்நீலம்
வெற்றி இலக்கங்கள் கும்பம் 04 25 41 48
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,360, 342
2019/09/15 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 495 திகதி 15 செப் 2019
வர்ணம் மஞ்சள்
C 09 31 49 78
வாசி உதக 19995
அடுத்த சுப்பர் ஜக்பொட் 140, 021, 158/=
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1041
சீட்டிழுப்பு திகதி 15.09.2019 சிவப்பு
U 02 37 39 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,424,844/=
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.



## தமிழரின் கோரிக்கைகளை ஏற்று

# உத்தரவாதம் வழங்கும் வேட்பாளர் எம்மிடம் வந்து பேசட்டும்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்று, எமது நிபந்தனைகளை அங்கீகரித்து அதற்கு உத்தரவாதம் வழங்கும் வேட்பாளர் எம்மிடம் வந்து பேசட்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சஜித் பிரேமதாச தரப்பு பிரதிநிதிகளுடன் நேற்று ஆர்.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதில் எமக்கு பிரச்சினையில்லை. கட்சியின் தரப்பில் களமிறங்கும் வேட்பாளர் தமிழர்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வினை வழங்கப் போகின்றார் என்பதே எமக்கு முக்கியம்.

அத்துடன் தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுகொள்ளும், எமது நிபந்தனைகளை அங்கீகரித்து அதற்கு உத்தரவாதம் வழங்கும் நபராக இருந்தால் எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தும் நபருடன் நாம் பேசி அவரை ஆதரிப்பது குறித்து தீர்மானம் எடுப்போம்" என்று சஜித் தரப்பிடம் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை களமிறக்கும் நோக்கில் ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர் சஜித் பிரேமதாச தரப்பு அணியினர் தமக்கான ஆதரவை திரட்டும் வகையில் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் சிங்கள கட்சிகளை சந்தித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இன்று அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, ராஜித சேனாரத்ன ஆகியோர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் கட்சியின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எ.சுமந்திரன் ஆகியோரை சந்தித்து தமக்கான ஆதரவை கோரியுள்ளனர். இதன் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் நாளை காலை கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. இதில் உறுப்பினர்களின் நிலைப்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் பிற்பகல் 3 மணிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## கைத்துப்பாக்கிகளுடன் இரண்டு பேர் கைது

*மருதமுனைப்பகுதியில் சம்பவம்*

மருதமுனையில் கைத்துப்பாக்கிகள் வைத்திருந்தவர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். மருதமுனை பெரிய நீலாவணை எல்லைப் பகுதியில் வைத்து நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து கார் ஒன்றில் பயணம் செய்த நிலையில் மருதமுனை பெரிய நீலாவணை எல்லைப் பகுதியில் இவர்கள் கைதாகினர். இவ்வாறு கைதானவர்கள் தற்போது கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஞா)

## *ஓ.எம்..பி.யின் யாழ். பணியகத்தை* அகற்றக்கோரி நேற்று தொடக்கம் காணாமல் போனோரின் உறவுகள் போராட்டம்



காணாமற்போனோர் அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்திய பணியகத்தை அகற்றுவரையான தொடர் போராட்டத்தை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று நண்பகல் ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள காணாமற்போனோர் அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்திய பணியகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக நினைவேந்தல் நிகழ்த்திய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அங்கிருந்து காணாமற்போனோர் அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்திய பணியகத்துக்குச் சென்று இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

காணாமற்போனோர் அலுவலகத்தின் யாழ்ப்பாண பிராந்திய பணியகத்தை திறப்பதற்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனையும் மீறி மிகவும் இரகசியமாக அதிகாலை வேளை அந்தப் பணியகம் கடந்த மாத இறுதியில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்தப் பணியகத்தை அகற்றுமாறு கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.


**தவறவிடப்பட்டுள்ளது**

அமிர்தலிங்கம் ருஜாந்தன் (NIC-NO.850273987V) என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தொழில் ஆள் அடையாள அட்டை (இலங்கை போக்குவரத்து சபை) என்பன தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் **0776988996** இலக்கத்துடன் தொடர்பினை மேற்கொள்ளவும். கண்டெடுத்தவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (198)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

வங்கியியல் கற்கைநெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business level I
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes.

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** [Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium – Tamil & English

**Certificate Course In English**
19 Batches have successfully Completed the course. Register your names.

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ( யாழ் புகையிரத நிலைய சந்திக்கு அண்மையில்) வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :-
0778985835 0772844970

**3 மாத கால அலுவலக பயிற்சிகள்**
2019 இல் A/L எடுத்தவர்கள் மாத்திரம்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கொடிகாமம், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மருதங்கேணி
● எமது அனைத்து கிளைகளிலும் 3 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
● A/L பெறுபேறுகள் கிடைக்கும் வரையிலான காலப்பகுதியில் மட்டும்.
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK – 550 /=Kg
கனடா – 950 /=Kg
ஜேர்மனி – 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
V2 TRAVELS

**A.R.K. MOBILE SHOP**
Mobile Phones | Repairing | Mobile Cards | Reloads | Photocopy | Lamination
Arasady Road, Jaffna. 021 221 6465
எம்மிடம் புதிய தொலைபேசியை குறைந்த விலையில் 1000/= இற்கு பெற்றுக்கொள்ளலாம். **(FM Radio, Torgh light** என்பன உள்ளன) கையிருப்பு உள்ளவரை மட்டுமே!! முந்துங்கள்!!!
**A.Ramana 077 923 3380** (C-7623)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (157)
021 222 8093 புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-7533)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.